
பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

தரமானதே சிறந்தது என்றால்




சொலிட் பம்பையே வாங்குங்கள்

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

விலை ரூ 2/.

When, only The best is Good Enough



Buy Solide Pumps

சுடர்: 3 யாழ்ப்பாணம் விபவ ஞூ ஆடி மீ 03 உ திங்கட்கிழமை ஹிஜ்ரி 1408 துல்ஹஜ் பிறை 03 ( 18 - 07 - 1988 ) UTHAYAN-A lively Tamil Daily கதிர்: 1?4

# சுழிபுரத்தில் தாக்குதல்; படை வாகனம் மீது!

## 2 ஜவான்களும், 2 பொதுமக்களும் பலி!

யாழ்ப்பாணம், ஜூலை 18

சுழிபுரத்தில் சனிக்கிழமை இரவு, இந்திய அமைதிப் படை வாகனம்மீது தாக்குதல் நடத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து படையினரும் பதில் தாக்குதல் நடத்தினர்.

சுழிபுரம் தபாற்கந்தோருக்குச் சமீபமாக நடந்த இந்த அசம்பாவிதங்களின் போது இந்தியப் படையைச் சேர்ந்த இரண்டு ஜவான்கள் உயிரிழந்தனர். பொதுமக்களில் இருவரும் மரணமானுர்கள்.

சனிக்கிழமை இரவுச் சம்பவத்தைத் தொடர்ந்து நேற்று மாலை ஐந்து மணிவரை சுழிபுரம், மற்றும் அதனை அண்டிய கிராமங்களில் உத்தியோகப் பற்றற்ற ஊரடங்குச் சட்டம் அறிவிக்கப்பட்டுக் கடும் தேடுதல் சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

சனிக்கிழமை இரவு சுமார் ஏழரை மணி அளவில் சுழிபுரம்தபாற்கந்தோருக்கு அருகில் அமைதிப்படை வாகனம் ஒன்றின் மீது இனந்தெரியாதோர் தாக்குதல் நடத்தினர்.

அதனைத் தொடர்ந்து படையினர் பதில் தாக்குதல் நடத்தினர்

சரமாரியாக துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது. ஷெல் தாக்குதல்களும் இடம் பெற்றன.

இந்த அசம்பாவிதத்தின் போது இரண்டு வாகனங்களும், இரண்டு பொதுமக்களும் பலியானுர்கள் சிலர் காயமடைந்தனர்.

சுழிபுரம் பகுதியில் நேற்று மாலை ஐந்து மணிவரை உத்தியோகப் பற்றற்ற ஊரடங்கு அமுல்படுத்தப் பட்டிருந்தது. அதனை அண்டிய கிராமங்களிலும் ஊரடங்கு அமுல் செய்யப்பட்டிருந்தது.

நடுத்தர வயதுடையவர்கள் குறிக்கப்பட்ட இடங்களுக்கு கூட்டிச் செல்லப்பட்டு விசாரிக்கப்பட்டனர்.

அசம்பாவிதங்களின் போது மரணமடைந்த இரண்டு பொதுமக்களில் ஒருவரின் சடலம் நேற்று மாலை அமைதிப் படையினரால் யாழ். ஆஸ்பத்திரியில் கொண்டு வந்து ஒப்படைக்கப்பட்டது. (அ-?-10)

### பாக்கிரின் செயலாளர் சுடப்பட்டார்

கொழும்பு, ஜூலை 18

தென்மாகாண ஆளுநர் பாக்கீர் மார்க்காரின் இணைப்புச் செயலாளர் லூஷன் டைட்டஸ் கடந்த வெள்ளிக்கிழமை இரவு இனந்தெரியாத நபர்களினுல் சுட்டுக் கொல்லப்பட்டார். [இ-எ]

முச்சந்தி முரளி



தென்னிலங்கையிலை சட்டமும், ஒழுங்கும் எப்பிடி இருக்குது எண்டதுக்கு நாடக அரங்குச் சம்பவம் ஒரு உதாரணமோ.....?

### முல்லைத்தீவு நோக்கி

வவுனியா ஜூலை 18

புளியங்குளத்திலிருந்து நெடுங்கேணி முல்லைத்தீவுப் பகுதிகளை நோக்கி நூற்றுக்கு மேற்பட்ட இராணுவ வாகனங்கள் வியாழனன்று அனுப்பிவைக்கப்பட்டன.

இந்த வாகனங்களில் பெரும் எண்ணிக்கையில் ஜவான்கள் காணப்பட்டனர். இராணுவ தளபாடங்களும் அதில் ஏற்றிச் செல்லப்பட்டதாகத் தெரியவருகிறது. (இ-164)

### பரந்தனில்

யாழ்ப்பாணம், ஜூலை18

பரந்தன் சந்தைப் பகுதியில் நேற்று மக்கள் நடமாட்டம் ஓரளவு காணப்பட்டது. கடைகளும் சில திறந்து வியாபாரம் நடைபெற்றது. (இ-10)

### வீட்டுப் பணிப் பெண்கள்

கொழும்பு, ஜூலை 18

அடுத்த மாதத்தில் இருந்து சிங்கப்பூர், ஹொங்கொங், வளைகுடா நாடுகளுக்கும் வீட்டுப்பணிப்பெண்களை அரசின் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பிரிவு அனுப்பி வைக்க உள்ளது.

இலங்கைப் பணத்தில் பத்தாயிரம் ரூபாவுக்குச் சமமான சம்பளம் மாதா மாதம் இப்பணிப்பெண்களுக்குக் கிடைக்கக் கூடியதாக இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டது. (இ-எ)

## இலங்கைத் தமிழரை வைத்திருந்தால் ரூ. 212 கோடி அனுப்பினுல் ரூ. 36 கோடி

புதுடில்லி, ஜூலை 18

இலங்கைத் தமிழர்களை வைத்திருந்தால் செலவு ஆண்டு ஒன்றுக்கு 212 கோடி ரூபா. அவர்களை இலங்கைக்கு அனுப்பினுல் அதற்கான செலவு மொத்தம் 36 கோடி ரூபா மட்டுமே.

இதனுல்தான் அங்குள்ள 27 ஆயிரம் இலங்கைத் தமிழர்களையும் சொந்த நாட்டுக்கே அனுப்ப மேற்குஜெர்மன் அரசு முடிவு செய்தது.

36 கோடி ரூபாவும் பிரயாணத்துக்காகவும் அகதிகளுக்கு தலா 6250 ரூபா கொடுப்பனவு மூலமும் செலவிடப்படும், (இ-எ)

# யாழ். மக்களால் இனியும் இன்னல்களை தாங்கமுடியாது

## பி. பி. சி. செய்தியாளர் பேட்டி

— அலுவலகப் பிரதிநிதி: சி. வி. இராஜேந்திரம் —

யாழ்ப்பாணம், ஜூலை18

யாழ்ப்பாண மக்களின் நிலைமை மிகவும் கவலைக்கு இடமானது. நான் சென்ற இடங்களில் எல்லாம் மக்களின் துயரக் கதைகளைத்தான் கேட்க முடிந்தது.

இன்மேலும் அவர்களால் குறைந்த அளவிலான இன்னல்களைத் தானும் தாங்க முடியாது.

இவ்வாறு யாழ்ப்பாணம் வந்துள்ள பி. பி. சி. கொழும்புச் செய்தியாளர் திரு. கிறிஸ் நட்டால் உதயனுக்கு அளித்த பேட்டி ஒன்றில் தெரிவித்தார்.

இலங்கை-இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு ஓராண்டு பூர்த்தியாவதை முன்னிட்டு, இப்போதைய சூழ்நிலைகளைப் பின்னணியாக வைத்துச் சிறப்பு நிகழ்ச்சி-உரைக்கோவை ஒன்றைத் தயாரிக்க திரு. நட்டால் இங்கு தங்கி நிற்கிருர்.

அவர் இதுவரை சேகரித்த தகவல்கள் கொண்டுள்ள கருத்துக்குறித்து கேட்கப்பட்டது. அப்போதே அவர் மேற்கண்டவாறு கூறினுர்.

திரு. கிறிஸ் நட்டால், உதயனுக்குத்தெரிவித்த கருத்துக்கள் இங்கே தொகுத்துத் தரப்படுகின்றன-

நான் சென்ற இடங்கள் எல்லாம் யாழ் மக்களின் துயரக் கதைகளைத்தான் கேட்க முடிந்தது.

யாழ் மக்களின் கவலைக்கிடமான நிலையைப் போக்குவதற்கு அவசியம் சிவில் நிர்வாகம் ஏற்படுத்தப்பட வேண்டும்.

சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்த அசாத்திய சூழ்நிலை காணப்படுவது உண்மைதான். அதைச் சமாளிப்பதற்கு ஒரு வழி உண்டு.

இந்திய அரசாங்கம் நிபந்தனையற்ற போர் நிறுத்தத்தை அறிவித்து விடுதலைப் புலிகள் தரப்பினரோடு சமாதானப் பேச்சுவார்த்தைகளை உடனடியாக ஆரம்பிப்பதே அந்த வழியாகும்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் நோக்கங்களுக்கு யாழ்ப்பாணத்தில் பூரண ஆதரவு இருப்பதை என்னுல் அவதானிக்க முடிந்தது.

அவர்களுக்கு நன் மதிப்பும் [illegible]ணிப்பும் இருக்

(6 ஆம் பக்கம் பார்க்க)

### கொழும்பு யாழ் பஸ்ஸில் கொள்ளை

வவுனியா ஜூலை 18

கடந்த சனிக்கிழமை இரவு கொழும்பிலிருந்து யாழ் நோக்கி வந்து கொண்டிருந்த மூன்று தனியார் பஸ்களை வவுனியாவுக்குச் சமீபமாக வழிமறித்த ஆயுதபாணிகளான கோஷ்டி ஒன்று பயணிகளிடம் கொள்ளை அடித்தது. (க 164)

பரந்தன் சம்பவம்

### மேலும் ஒருவர் மரணம்

கடந்த வெள்ளிக்கிழமை பரந்தனில் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தின் போது காயமடைந்த மற்றும் ஒருவர் நேற்று யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் மரணமானுர்.

### தருமபுரத்தில் இருவர் கொலை

யாழ்ப்பாணம், ஜூலை18

கிளிநொச்சி தருமபுரம் பகுதியில் இரண்டு இளைஞர்கள் இனந்தெரியாத சிலரால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

நேற்றுக்காலை இச் சம்பவம் நடைபெற்றது.

மரணமானவர்களின் பெயர் விவரங்கள் செய்தி எழுதப்படும் வரை தெரியவரவில்லை. (இ-10)

யாழ்- மாவட்டத்தில்

## 3ஆவது கட்ட அடகு நகை விநியோகம் தாமதமாகும்

யாழ்ப்பாணம், ஜூலை 18

யாழ்- மாவட்ட அடகு நகை விநியோகத்தின் அடுத்த கட்டமான மூன்ருவது கட்ட விநியோகம் சற்றுத் தாமதிக்கும்.

மக்கள் வங்கியின் வடபிராந்திய பிரதேச முகாமையாளர் மு. கணேசசுந்தரம் உதயனுக்கு இதனைத் தெரிவித்தார்.

யாழ்- மாவட்டத்தில் இதுவரை இரு கட்டங்களாக அடகு நகைகள் வழங்கப்பட்டுள்ளன.

மூன்ருவது கட்டமாக பளை, சாவகச்சேரி பகுதியினருக்கு அடகு நகைகள் விநியோகிக்கப்பட உள்ளன.

வவுனியா மாவட்ட அடகு நகை விநியோகம் தற்பொழுது ஆரம்பிக்கப்பட உள்ளதாலேயே யாழ்- மாவட்டத்தில் மூன்ருவது கட்ட விநியோகத்தை தாமதிக்க வேண்டியுள்ளது.

இப்படி அவர் கூறினுர். (இ-9)

### அடுத்து வவுனியாவில்

யாழ்ப்பாணம், ஜூலை18

வவுனியா மாவட்ட மக்களின் அடகு நகைகள் விநியோகம் வெகு விரைவில் ஆரம்பமாக உள்ளது.

இதற்காக கொழும்பிலிருக்கும் நகைகள் விமானமூலம் வவுனியாவுக்கு அனுப்பி வைக்கப்பட உள்ளன.

அடகு நகைகளை மீளளிக்கக்கோரி வவுனியா மாவட்ட விவசாயிகள் சங்கமும், நகை அடகு வைத்தோர் சங்கமும் பல போராட்டங்களை நடத்தி வந்தன.

இறுதியாக இம்மாதம் ஐந்தாம் திகதி செவ்வாய்க்கிழமை வவுனியா மக்கள் வங்கியின் முன்பாக பிரஸ்தாப சங்கங்கள் மறியற் போராட்டம் ஒன்றையும் நடத்தி இருந்தன.

இந்தநடவடிக்கையை அடுத்தே தற்பொழுது வவுனியாவில் அடகு நகைகளை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (இ-9)

# வடக்கு-கிழக்கு தரை நிலைமை குறித்து இந்தியா புதிதாக மதிப்பீடு செய்யும்

கொழும்பு. ஜூலை 18

வன்னிக் காடுகளில் 'ஒப்பரேஷன் செக்மேற்' இராணுவ நடவடிக்கை தொடரும் அதேவேளை, வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள தரை நிலைமை பற்றி இவ்வாரம் இந்தியா புதிதாக மதிப்பீடு செய்யுமாம்.

இந்திய வட்டாரங்களை ஆதாரங் காட்டி 'சண்டே ஐலண்ட்' இச் செய்தியை வெளியிட்டிருக்கிறது.

தோல்வியில் முடிந்த பேச்சுக்கள் பற்றி தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் கடைசியாக விடுத்த அறிக்கைக்குப் பின்னர் பல தெரிவுகள் (Options) குறித்து இந்தியா பரிசீலித்து வருகிறது-

இராணுவ நடவடிக்கையைத்தீவிரப்படுத்துவது மூன்ருவது தெரிவு ஆகும்-

இத்தெரிவுகள் பரிசிலனை செய்யப்பட்டு இறுதியாக்கப்படும்வரை தற்போதைய இராணுவ நடவடிக்கையும் தொடரும்; பேச்சுக்களை நடத்தும் முயற்சியும் தொடரும், இப்படி, 'சண்டே ஐலண்ட்' செய்தி தெரிவிக்கிறது.

### சுமார் 200 பேர் பார்த்திருக்க இடம் பெற்ற சூடு!

கொழும்பு, ஜூலை 18

சுமார் 200 பேர் கொண்ட கூட்டம் பார்த்திருக்க பிரபல வர்த்தகர் ஒருவர் கொழும்பு மாநகரில் கடந்த வெள்ளி இரவு மூன்று பேரினுல் சுட்டுக் கொல்லப்பட்டார்.

லயனல் வென்ட் தியேட்டரில் 'அமைதி' என்ற நாடகத்தைப் பார்த்துவிட்டு வீடு திரும்புவதற்காக காரில் ஏறிக்கொண்டிருந்த சமயத்தில் நிமால் றிச்சர்ட் என்ற அந்த வர்த்தகர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

நாடகத்துக்கு அழைக்கப்பட்டிருந்த பிரதம அதிதிகளில் ரிச்சர்ட்டும் ஒருவர்.

சம்பவத்தைப் பார்த்துக்கொண்டு நின்றவர்களில் அவரின் மனைவியும் குழந்தைகளும் இருந்தனர்.

இவரைச் சுட்ட மூன்று துப்பாக்கி மனிதர்களும் கறுப்பு நிற காற்சட்டை அணிந்திருந்தனர். (இ-எ)

## போலி அடையாளக் கார்ட்டுகளுடன் சிலர் கொள்ளையில் ஈடுபடுகின்றனர்

### விடுதலைப் புலிகள் அறிக்கை

யாழ்ப்பாணம்,ஜூலை 18

விடுதலைப் புலிகள் என்ற பெயரில் போலி அடையாளக் கார்ட்டுகளுடன் சிலர் கொள்ளைகளில் ஈடுபட்டு வருகின்றனர் என்று தமிழீழ விடுதலைப் புலிகள் விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அறிக்கையின் விவரம் வருமாறு:.

தற்போது உள்ள சூழ்நிலையைப் பயன்படுத்தி எமது இயக்கம் என்ற போர்வையில் போலி அடையாளக் கார்ட்டுகளைக் காட்டி பலஇடங்களில் பல சமூக விரோதக் கொள்ளை சம்பவங்கள் நடைபெற்று வருகின்றன.

இதன் அடிப்படையில் அண்மைக்காலங்களாக தென்மராட்சிப் பகுதிகளான கச்சாய், அல்லாரை, மட்டுவில், தச்சன்தோப்பு,நாவற்குழி, மிருசுவில் ஆகிய பகுதிகளில் பல கொள்ளைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

இந்த வகையில் 16-07-88 அன்று யாழ்ப்பணம் அன்னசத்திர ஒழுங்கையைச் சேர்ந்த சோமசுந்தரம் கோமேஸ்வரன் (வயது 22) என்பவர் எமது போலி அடையாளக் கார்ட்டுடன் கொள்ளைச் சம்பவம் ஒன்றில் ஈடுபட்டபொழுது மக்களால் கையும் மெய்யுமாகப் பிடிக்கப்பட்டு எம்மிடம் ஒப்படைக்கப்பட்டார்.

இவருக்கு சாவகச்சேரிப் பெருங்குளம் சந்தியில் வைத்து 16-07-88 அன்று எமது அதியுயர்

(6 ஆம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

18- 7 - 1988

ஆடி- 03

திங்கட்கிழமை

சுபநேரம்:
12-01முதல் 01-31வரை

ராகுகாலம்:
07-31 முதல் 09 01வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

### படுகொலைகள் நீடிப்பு

மாத்தறையில் மகாநமதுடாவ என்பவர் தீவிரவாதிகளினுல் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இவர்.மாத்தறை முன்னுள் எம்பி பி. வை. துடாவையின் நெருங்கிய உறவினர் ஆவார்.

அம்பாறை மாவட்ட அபிவிருத்திச்சபை உறுப்பினரான திரு. மில்டன் டயஸ் அபயசிங்கா நேற்று மாலை 4 மணியளவில் சுட்டுக்கொல்லப்பட்டார். (இ-எ)

### மக்கள் வங்கி அறிவித்தல்

### மாங்குளம் கிளை

மேற்படி கிளை 18-7-88 திங்கள் காலை 10.00 மணிக்கு மீண்டும் மாங்குளம் தபால் கந்தோர் கட்டடத்தில் இயங்க ஆரம்பிக்கும் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்ருேம்.

கூட்டுறவுச் சங்கங்களும், ஏனைய வாடிக்கையாளர்களும் தொடர்ந்தும் இக் கிளைக்கு ஆதரவு நல்குமாறு கேட்டுக் கொள்கிருேம்.

மு. கணேசசுந்தரம்
பிரதேச முகாமையாளர்,
(வட பிராந்தியம்)

14-7-88

(C 5876)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

றிகொண்டிசன் ஹொண்டா C50, C70, C90, MD70 Recoon GS 125 எம்மிடம் விற்பனைக்கு உண்டு. ஸ்தூபி பெரிய மணி, குத்து விளக்கு மற்றும் கோவில் பொருட்களும் விற்பனைக்கு உண்டு. லம்ஸ், 26/3 மானிப்பாய் வீதி, கிளை 76/2 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (4946)

## காணி விற்பனை

வேலணைகிழக்கு முத்துமாரியம்மன் கோவில் ரோட்டில் 10 பரப்புக் காணியும் எட்டு அறை கொண்ட வீடும் விற்பனைக்குண்டு. தொடர்பு: சோமநாதன் 369/2 நாவலர் ரோட் யாழ்ப்பாணம் அல்லது M. நவரெத்தினம் 14A, விதானைவீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். (4996)

நுணுவில் சந்திக்கருகாமையில், ரோட்டுக்கரையில் 4½ பரப்புக் காணியுடன் கூடிய சகல வசதிகளும் கொண்ட கல்வீடு உடனடியாகவிற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும். க. பரமசாமி, ஆறுமுகம் லேன். நுணுவில் மேற்கு, சாவகச்சேரி. (4942)

உடுவில் மகளிர் பாடசாலைக்கு 200யார் தூரத்தில் டச்ரோட்டில் சகல வசதி கொண்ட 4 பரப்புக்காணி உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு விலாசம்:- J. T. வின்சிலோ C/o டாக்டர் செல்வச்சந்திரன், மானிப்பாய் ரோட், உடுவில். (4935)

கொக்குவில் கிழக்கு கோணமலை வைரவர் கோவில் ஒழுங்கையில் உள்ள துர்க்கை அம்மன் கோவிலுக்கு அருகில் சகல வசதியும் கொண்ட 4 பரப்புக்காணி விற்பனைக்குண்டு. தொடர்பு விலாசம் V. சுப்பிரமணியம், அயோத்தி, பலாலி ரோட், கோண்டாவில் கிழக்கு. (4941)

## கோழிக்குஞ்சுவிற்பனை

ஒருநாள் (Tetra- SL) பிறவுண் சேவல் பேட்டுக் குஞ்சுகள் (Christombu) Golden Comet பிறவுண் சேவல், பேட்டுக்குஞ்சுகள் ஆடி 19ஆம், 20ஆம் திகதிகளில் விநியோகிக்கப்படும். 250சேவல் குஞ்சுகளுக்குமேல் எடுப்பவர்களுக்கு விலை 4 ரூபா/- R.S.K. Farm' முருகபதி உடுவில் (டச்சுரோட், மான்ஸ் பாடசாலைக்கு அருகாமை) (4927)

## மலிவு விற்பனை

அலுமினிய தொழிற்சாலையில் பழுது அடைந்த பாத்திரங்கள் மலிவு விலையில் கொடுக்கப்படும். 16-7-88 தொடக்கம் 18-7-88 வரை. முகவரி: ''பேள் உலோகத் தொழிற்சாலை'' 60, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (பெருமாள் கோவில் - வெலிங்டன் சந்திக்கும் இடையில்) (4940)

## மீன் பிடி உபகரணம் விற்பனைக்கு

சீ-நோர் (காரைநகர்) 17½ பிளாஸ்ரிக் படகு ஒன்று; சுப்பர் பிளாஸ்ரிக்படகுஇரண்டு; யமகா வெளி இணைப்பு இயந்திரம்(8 HP) ஒன்று; யோன்சல் (6 HP) இரண்டு; 21x7'' வலைகள் 14 பீஸ்; 9x3½'' வலைகள் 20 பீஸ்; 6x2½x150 (அடை வலைகள்) 24பீஸ் மற்றும் தூண்டி வலையும் கைவசம் உண்டு. தொடர்பு:- M. K. செல்வத்துரை, வேல் வீதி, மயிலிட்டி. (4936)

## தவறிவிட்டது

15-07-88 இல் 19694 1070 V 536402870 ஆகிய இரு அடையாள அட்டைகள் யாழ் நகரில் இருந்து சேரதீவு பஸ் ஏறும் போது தவறி விட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (5082)

புதிய இரண்டு வீட்டுப்படமும் (PLAN) காணிப்படமும் தவற விடப்பட்டுள்ளன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஆ. சி. பரந்தாமன் கட்டிட படவரைஞர் ''பூபதி'' கன்னை திட்டி ஒழுங்கை, யாழ்ப்பாணம் அல்லது விஞ்ஞானபீடம் யாழ். பல்கலைக்கழகத்தில் ஒப்படைக்கவும். (5076)

துரைராசா சண்முகராசா ஆகிய எனது 653231679 V இலக்கமுடைய அடையாள அட்டை யாழ்ப்பாணம் சண்டிலிப்பாய் வீதியில் தவறிவிட்டது. சண்டெடுத்தவர்கள் உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (5080)

கொழும்பிலிருந்து 16-7-88 சனிக்கிழமை யாழ்தேவியில் வந்து கிளிநொச்சியிலிருந்து 30ஸ்ரீ 3635 இலக்கமுள்ள மினிபஸ்ஸில் வந்த பொழுது பாதுகாப்பிற்காக ஊர்காவற்றுறை இளைஞரிடம் உடைகள் அடங்கிய நீல நிறப் பையை ஆனையிறவு தடைமுகாமில் இறங்கியபொழுது பஸ்ஸைத் தவறவிட்டதால் அதனை அவரிடம் மீண்டும் பெற்றுக்கொள்ள முடியவில்லை. அப்பையைத் தயவு செய்து சுந்தரமூர்த்தி அன்சன்ஸ் 210 (76), ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் ஒப்படைக்கவும். (5085)

## தேவை

கற்பூரம் தயாரிப்பதிலும் பக்கற்றிங் செய்வதிலும் 05 வருட அனுபவம் உடைய ஸ்தாபனத்தை நிர்வாகம் செய்யக்கூடிய பெண்மணி தேவை. மாத வேதனம் இலவச தங்கும் இடவசதி உண்டு. திருமணமாகாதவர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும் 281, C/o உதயன், யாழ்ப்பாணம். (4949)

இளம் முட்டையிடும் பேட்டுக் கோழிகளும் கன்னிப் பேடுகளும் தொகையாக உடன் தேவை: தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி No. 127, Kannathiddy Road, J ffna. (4948)

## சோதிடம்

நினைத்த காரியம், ஜாதகபலன், விவாகப் பொருத்தம், எண்சோதிடம் முதலான விடயங்களுக்கு அரச அங்கீகாரம் பெற்ற சோதிட விற்பனரை நேரிலோ தபால் மூலமோ தொடர்பு கொள்க. 'சக்திசரவணா' 210, கஸ்தூரியார் வீதி, (இந்துக் கல்லூரி மைதானத்திற்கு முன்பாக) யாழ்ப்பாணம். (4945)

## மாந்திரீக பரிகாரம்

தொழில் விருத்தி மங்களமான மணவாழ்வு மனைகளில் மங்கலம் நோய் பிணி தீரல் சத்துருமித்துருவாதல் போன்ற சகல விடயங்களுக்கும் பாரம்பரிய பரம்பரை சோதிட மாந்திரீக பரிகாரகரால் தீர்வு காணப்படும். நேரில் வருக. ''சக்திசரவணா'' 210, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (இந்துக் கல்லூரிமைதானத்திற்கு முன்பாக) (4944)

## மணமக்கள் தேவை

கனடாவில் நிரந்தர தொழில் புரியும் 31வயது நிரம்பிய ரோமன் கத்தோலிக்க வேளாள இனத்தைச் சேர்ந்த மணமகனுக்கு நன்கு படித்த பெண்ணும், அவரின் சகோதரியான 30 வயது நிரம்பிய ஆயுர்வேத டாக்டருக்கு கல்வித் தகைமையுடைய பட்டதாரி, கணக்காளர்' பொறியியலாளர் எதிர்பார்க்கப் படுகிறது. தொடர்பு, 282, C/o, உதயன், யாழ்ப்பாணம். (5351)

உயர் வேளாள குல நற்பண்பும் அழகும் உள்ள பட்டதாரிப் பெண்ணுக்கு நல்ல பதவியில் உள்ள மணமகன் தேவை. சாதகக் குறிப்புடன் தொடர்பு கொள்ளவும் 279, C/o உதயன் யாழ்ப்பாணம். (4943)

38 வயதுள்ள (புரட்டஸ்தாந்து மதத்தைச் சேர்ந்த) பெண்ணுக்கு மணமகன் தேவை. கொழும்பில் (நர்ஸரி பள்ளிக்கூடத்தில் படிப்பிக்கின்றார்) தகுந்த சீதனம் வழங்கப்படும். புரட்டஸ்தாந்து மதத்தினரை எதிர்பார்க்கின்றோம். மேலும்தொடர்பு 280, C/o, உதயன் யாழ்ப்பாணம். (4947)

## TYPE WRITER

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும் அத்துடன் சிறந்தமுறையில் திருத்திக்கொள்ளவும் Fudo Enterprises 39/17 3rd Lane, Power House Road, Jaffna, Samy & Co Shabra அருகாமையில். (C5300)

## போட்டிப் பரீட்சை

ஆண்டு 5 புலமைப் பரீட்சைக்கான முன்னோடிப் பரீட்சை 01-08-1988 காலை9-00மணிக்குநடைபெறும். விண்ணப்ப முடிவுத் திகதி 25-07-1988 Modern Education Centre, Karaveddy. (4950)

## அறிவிப்பு — கடிகாரம்

யாழ்/ஆஸ்பத்திரி வீதியில் 11-07-88 அன்று எனது ROTARY கைக் கடிகாரம் அபகரிக்கப் பட்டுள்ளது. இது எனக்கோர் உணர்ச்சிப் பாங்கான பொருள் ஆகும். இது பற்றி தகவல் தருவோருக்கு அரைவாசிப் பெறுமதி சன்மானமாக வழங்கப்படும்:- இல 257 அரசடி வீதி, யாழ்ப்பாணம். (5352)

## தொழில் நுட்ப பயிற்சி வகுப்புகள்

றேடியோ, ரீ. வி, டெக், குளிர்சாதனவியல் (Air Condition) பிளம்பிங், வெல்டிங், மோட்டார் மெக்கானிசம் றிவைண்டிங், கட்டிடம் வரைதல், Spoken English பிரபல ஆசிரியர் குழுவினால் பயிற்சி வகுப்புக்கள் நடாத்தப்படுகின்றன. குறித்த அனுமதி மட்டும் வழங்கப்படும். மாணவர்களின் இன்றைய கலங்கரவிளக்கம் நெஸ்டா (Nesta) N sta Technical Institute, 59.St tion Road, Jaffna. (5083)

## SPOKEN ENGLISH

Spoken English with Grammar by S. B. Iyar புதிய பிரிவு தூர இடங்களில் இருந்து வருபவர்களுக்காக ஆரம்பம் 21-07-88 நேரம் பகல் 10 மணி - 12 மணி வரை. 12, வைமன்வீதி' நல்லூர். (5050)

## காணி விற்பனை

நாரந்தனையில் பண்ணை வீதியில் ஒன்பதாம் கட்டைக்கு அண்மையில் அல்லில் எனப்படும் பதினாறு பரப்புத் தோட்ட வயற்காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: 27, மவுண்காமல் வீதி, யாழ்ப்பாணம். (5071)

---

அன்னை சாரதாதேவி

## நினைவாக கலாசார நிலையம்

பருத்தித்துறை, ஜுலை 18

ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம், அன்னை சாரதா தேவியின் பெயரால் கலாசார நிலையம் ஒன்றை நிறுவவுள்ளது.

வல்லிபுரக் கோவிலுக்கு அருகாமையில் நிறுவப்படவுள்ள இந்த நிலையத்துக்கு முன்னோடியாக சென்னை அடையாறு அரசினர் இசைக் கல்லூரியில் பயிற்சி பெற்ற ஆசிரியை செல்வி இ. பராசக்தியவலின் பயிற்றுவிக்க வகுப்பு ஒன்றை சேவாச்சிரமத்தில் ஆரம்பிக்க உள்ளார். (சி)

## நன்றி கூறும் 'புளொட்'

யாழ்ப்பாணம் ஜுலை 18

கடந்த 13 ஆம், 14 ஆம் திகதிகளில் நடத்தப்பட்ட ஹர்த்தாலுக்கு ஆதரவு வழங்கிய அனைவருக்கும் நன்றி தெரிவித்து தமிழ் ஈழ மக்கள் விடுதலைக் கழகம் (புளொட்) அறிக்கை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில், அந்நிய சக்திகளுக்கு எதிராக நடத்தும் போராட்டத்துக்கு ஆதரவு தராதவர்கள் அந்தச் சக்திகளுக்கு துணை செல்பவர்கள் என்றே எம்மால் கணிக்கப்படும்.

அவர்கள் மீது கடுமையான நடவடிக்கையும் எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

---


காரைநகர்

## புதியதோர் உலகம் செய்வோம்

நூலகத்தின்

## அதிஷ்டலாபச்சீட்டிழுப்பு விபரம்

நூலக அபிவிருத்திக்காக மேற்கொள்ளப்பட்ட சீட்டிழுப்பு சென்ற 1988-07-16 சனிக்கிழமை அதிஷ்டம் பார்க்கப்பட்டதன் விபரம் வருமாறு:

1ஆம் பரிசு துவிச்சக்கர வண்டி — இல. 27
2ஆம் பரிசு சுவர் மணிக்கூடு — இல. 727
3ஆம் பரிசு கைக்கடிகாரம் — இல. 151

மேலும் 10 ஆறுதல் பரிசுகள்
226, 334, 582, 1680, 1499, 166, 50, 1676, 1626, 1168

மேலே குறிப்பிடப்பட்டவை பரிசுக்குரிய இலக்கங்களாகும். பரிசுக்குரியவர்கள் தமது சீட்டினை அத்தாட்சிப்படுத்திப் பரிசினைப் பெற்றுக்கொள்ளவும்.

— நிர்வாகம்

(5331)

## யூனிவேர்சல்

கந்தர்மடம் - யாழ்ப்பாணம்.

## A/L 90

தாவரவியல்

ஆசிரியர்:
திரு. பொ. ஐங்கரநேசன்

செவ்வாய் } காலை 6.15 - 7.15
வியாழன் } பிரிவு I

சனி } காலை 6.30 - 7.30
ஞாயிறு } பிரிவு II

(5314)

## ★ அறிவொளி கல்விக் கழகம் ★

நல்லூர்.

Physics
Mr. சத்தியசீலன்

Chemistry
Mr. மக்லி

Zoology
(பிரபல ஆசிரியர்)

Botany
திரு. குகாதரன்

20-07-88 4. 30 p.m.

## டேட்டா செட் (DATA SET)

## உருக்குத் தளபாடங்கள் (Steel Furniture)

* எமது நிறுவனத்தின் உள்நாட்டுத் தயாரிப்பு
* பல வருட அனுபவமும் செயற்திறனும் சேர்ந்து உருவாக்கப்பட்டவை
* மிக உயர்ந்த தரமும் அழகும் நிறைந்தவை

உங்களுக்கு- உங்கள் அலுவலகத்துக்கு-
உங்கள் வீட்டுப் பாவனைக்கு ஏற்ற அனைத்து
உருக்குத் தளபாடங்கள்

* வாட்றோப்ஸ் (Wardrobes)
* மேசைகள்
* கபினேட் (Filing Cabinet)
* அலுமாரிகள்
* காசுப்பெட்டிகள் (Cash Box)

மற்றும்

* தங்கள் விருப்பத்திற்கும் தேவைக்கும் ஏற்ற வகையில் தயாரித்து வழங்கப்படும்.

எமது காட்சி அறைக்கு இன்றே விஜயம் செய்யுங்கள்

## ஒவிஸ் இகுயிப்மென்ற் லிமிட்டெட்
## Office Equipment Ltd.

கிளை அலுவலகம்:-
45, பிரப்பம் குளம் வீதி,
(off K. K. S. Road,)
யாழ்ப்பாணம்.
(... சந்தியிலிருந்து 100 யார்) (சி-5532)

## S. P. அன்ரன்

மகிழ்ச்சியுடன் அறியத்தரும்

## வெளிநாட்டுப் பயண ஒழுங்குகள்

## கனடா, ஜேர்மனி, இத்தாலி, பிரான்ஸ், அமெரிக்கா

இறைவன் அருளைத்துணையாகக்கொண்டு எமது அடுத்த சிறு குழுக்கள் இரண்டு சடந்த வாரம் கனடாவுக்குத் தமது பயணத்தை வெற்றிகரமாக மேற்கொண்டன என்னும் நற்செய்தியை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம். மேலும் பிரதி வாரமும் எமது சிறு குழுக்கள் ஜெர்மனி, பிரான்ஸ் நாடுகளுக்கு எவ்வித இடையூறுமின்றிப் பயணம் மேற்கொண்டு வருகின்றன.

மேற்படி நாடுகளுக்கு நீங்கள் பயணம் செய்ய இதுவே கடைசிச் சந்தர்ப்பமாகவும் இருக்கலாம். எனவே விவரங்களுக்கு உடனடியாகத் தொடர்பு கொள்ளுங்கள்.

எமது புதிய சேவைகளாக அமெரிக்காவுக்கு விசா எடுத்து நிச்சயமான பயண ஒழுங்குகளைச் செய்து தருகின்றோம்.

### சிங்கப்பூர் கப்பல் வேலைவாய்ப்புகள்:

சிங்கப்பூர், மலேசியா, பர்மா, ஜப்பான் முதலிய கிழக்காசியப் பிராந்தியத்தில் சரக்குக் கப்பல்களில் பணிபுரிய கப்பல் பணியாட்கள் உடனடியாகத் தேவை.

கடல் அனுபவம் உடையவர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும்.

### கனடா:

கனடாவில் கண்ணியமான குடும்பங்களில் வீட்டு வேலை வாய்ப்பு.

### சவூதி அரேபியா:

சவூதி அரேபியா தலைநகரில் பிரசித்தி பெற்ற ஒரு உணவுத் தொழிலகத்தில் (CATERING COMPANY) பணிபுரிய தொழிலாளர்கள், சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் முதலியோர் தேவை.

அடிப்படைச் சம்பளம்: 450 சவூதி றியால்

ஓவர்டைம் உத்தரவாதம்.
உணவு இருப்பிடம் இலவசம்.

### மாலைதீவு:

மாலைதீவுத் துறைமுகத்தில் பணிபுரியத் தொழிலாளர்கள் தேவை.

மாலைதீவு அரசாங்கத்தின் தொழில் அனுமதிப் பத்திரத்துடன் பயணம் செய்ய உத்தரவாதம்

அடிப்படைச் சம்பளம்:
75 அமெரிக்க டொலர்கள்

ஓவர்டைம் உண்டு. உணவு, இருப்பிடம் இலவசம். இரண்டு வாரங்களுக்குள் பயணம் நிச்சயம். நியாயமான குறைந்த கட்டுப் பணம். விரும்புவோர் உடனே தொடர்பு கொள்ளவும்.

### சிங்கப்பூர், கனடா, கிறீஸ்:

வீட்டு வேலைப் பணிப் பெண்கள்

ஓரளவு ஆங்கில அறிவுடைய பெண்களுக்கு மேற்படி மூன்று நாடுகளிலும் கண்ணியமான குடும்பங்களில் வீட்டு வேலை வாய்ப்பு

விசா முதலிய ஒழுங்குகள் செய்து தரப்படும்.

மற்றும் சகல விவரங்களுக்கும் உடனே தொடர்பு கொள்ளும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

உங்கள் பயண அமைப்பாளர்

## S. P. அன்ரன்

வேல் றேட் சென்ரர்
(மக்கள் வங்கி முன்பாக)
இல. 114, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(C 5884)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகதிகள் புனர்வாழ்வு கழக காப்பாளர்

**திரு. க. கந்தசாமியை**

**விடுவித்து உதவவும்**

அகதிகள் புனர்வாழ்வு கழக ஸ்தாபக உறுப்பினரும், காப்பாளரும் ஆன திரு. க. கந்தசாமியவர்கள் 'நியூசரா பப்பிளிகேஷன் லிமிட்டெட்'' ''சற்றடே றிவியூ' பத்திரிகை வெளியீட்டகம் ஆகிய பல முன்னோடி மக்கள் சேவையில் அயராது உழைத்தவர். தமிழ் மக்களின் பிரச்சினைகளை சர்வதேச மட்டத்தில் ஞால் கொடுக்க உதவிய மனித உரிமை போராட்டவாதி.

இருதய சுகவீனமுடைய இப் பெரியார் வயதில் முதிர்ந்தவர். எப்பாரிய தாக்கத்தையும் தாங்கமுடியாதவர். எனவே அவரை எக் காரணம் கொண்டு கடத்தியிருந்தாலும், மனித நேய அடிப்படையில் உடனடியாக விடுவித்து உதவுமாறு தமிழ் மக்கள் சார்பில் தாழ்மையுடன் வேண்டுகின்றோம்.

சமூக அபிவிருத்திச் சபை
76, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

(C. 5872)

திருமலை மீனவருக்கு

# கனேடிய அரசிடமிருந்து இலவச இயந்திரப் படகுகள்

## தூதுவர் கரோலின் வழங்கினர்

திருகோணமலை ஜூலை18

திருகோணமலை நகர எல்லைக்குள் உள்ள திருக்கடலூர் மீனவ மக்களுக்கு கனேடிய அரசாங்கம் ஆழ் கடலில் மீன் பிடிப்பதற்காக 10 இயந்திரப் படகுகளையும் அதற்குரிய மீன்பிடி உபகரணங்களையும் இலவசமாக வழங்கியது.

இந்த நன்கொடையின் பெறுமதி 4 லட்சத்து 80 ஆயிரம் ரூபா ஆகும். இது தவிர அப் பகுதிப் பெண்களுக்கு கோழிப்பண்ணை ஆரம்பிப்பதற்காகவும் நிதியுதவி வழங்கியுள்ளது. அத்தோடு பாலர் பாடசாலை, வாசிகசாலை போன்றவைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இவற்றைப் பார்வையிடுவதற்காகவும் ஆழ்கடல் மீன்பிடித் திட்டத்தை அங்குரார்ப்பணம்செய்து வைப்பதற்காகவும் கனேடிய உயர் ஸ்தானிகர் திருமதி. கரோலின் மிஸ்கி தனது கணவருடன் திருகோணமலை வந்திருந்தார்.

திருக்கடலூர் மக்கள் அவருக்கு மகத்தானவரவேற்பு அளித்துஅவரைக் கௌரவித்தனர்.

அங்கு உரையாற்றிய திருமதி. கரோலின் மிஸ்கி தனக்கு அளிக்கப்பட்ட வரவேற்புக்கு மகிழ்ச்சி தெரிவித்தார்.

திருகோணமலைக்குச் செல்ல வேண்டாமென்று கொழும்பிலுள்ளவர்கள் தடுத்தும் தான் இங்கு வந்ததாகவும் இங்கு தமக்கு ஏற்பட்ட அனுபவங்களை அங்கு சென்று அவர்களுக்குக் கூறுவதாகவும் திருமதி மிஸ்கி கூறினார்.

உயர் ஸ்தானிகரும் மற்றும் உயர் அதிகாரிகளும் மீன்பிடி வள்ளங்களில் சுற்றுலா மேற்கொண்டனர்,

அங்கு ஆரம்பிக்கப்பட்டுள்ள கோழிப்பண்ணை. பாலர் பாடசாலை, போன்றவற்றையும் சென்று பார்வையிட்டார். (இ 150)

## நீர்வரி இடாப்பில் பதிவு

கிளிநொச்சி ஜூலை 18

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள புனரமைக்கப்பட்ட குளங்களின் கீழ்நீர்ப்பாசனம் பெற்று விவசாயம் செய்பவர்களது பெயர்களை நீர்வரி இடாப்பில் பதிவு செய்யவும் திருத்தவும், கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திரு. கே. தேவசிகாமணி நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

இதற்கான விண்ணப்பங்களை எதிர் வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் அரசாங்க அதிபர்– காணிக்கிளை–கச்சேரிகிளிநொச்சி என்ற விலாசத்துக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (இ-76)

## தெல்லிப்பளை வீமன்காமம் பகுதிகளில் வீடுகள் நிர்மாணம்

குருநகர், ஜூலை 18

மனித முன்னேற்ற நடுநிலையம் தெல்லிப்பளை, வீமன்காமம் பகுதியில் நாற்பது சிறு வீடுகளை அமைத்து வருகிறது.

முதற் தொகுதி இருபது வீடுகள் நிறுவப்பட்டு முடிந்துள்ளன. மேலும் இருபது வீடுகளை அமைத்துக் கொடுப்பதில் நடுநிலையம் தீவிரமாக ஈடுபட்டு வருகிறது.

மயிலிட்டி – ஊறணி பங்குத் தந்தை வண- பிதா பீற்றர் துரைரெத்தினத்தின் சிபார்சுக்கமைய கத்தோலிக்கத் திருச்சபை நிதியில் இருந்து நடுநிலைய இயக்குநர் வண பிதா ம. இ. பயஸ் அடிகளார் மேற்படி வீடுகளை அமைக்க நிதி ஒதுக்கிக் கொடுத்துள்ளார். (இ-51)

## கமிஷனைக் குறைக்குமாறு ஓய்வூதியர் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை18

ஓய்வூதியம் பெறுவோரின் கொடுப்பனவுகளின் போது கூடுதலான கமிஷன் அறவிடுவதை சாவகச்சேரி கிராமிய வங்கி (எம். பி. சி. எஸ்) நிறுத்தவேண்டும். தலா 5 ரூபா கமிஷன் அறவிடுவது நியாயமானது ஆகும்.

தென்மராட்சி ஓய்வூதியம் பெறுவோரின் சங்கம் யாழ் – மாவட்ட – அரசாங்க அதிபருக்கு அனுப்பியுள்ள மகஜரில் மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

சங்கத்தின்செயலாளர் திரு. எஸ். கே. குலசேகரம் ஒப்பமிட்ட பிரஸ்தாப மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:–

இவ்வளவு காலமும் அறவிடப்பட்ட கமிஷன் தொகைகளில் ஐந்து ரூபாவுக்கு கூடவசூலிக்கப்பட்ட தொகைகள் யாவும் மீளளிக்கப்பட வேண்டும்.

கடந்த காலங்களில் ஓய்வூதியக் கொடுப்பனவுகள், வங்கிகள் மூலமாகவும், தபாற் கந்தோர் மூலமாகவும் கொடுபட்டபோது, அவர்கள் எதுவித கமிஷனையும் அறவிடவில்லை.

இப்படி தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## வீதியின் அவல நிலை

நெடுந்தீவு, ஜூலை 18

நயினாதீவு பிரதான வீதி மிகவும் மோசமான நிலையில் உள்ளது. இந்த வீதியால் வாகனங்களோ பாதசாரிகளோ செல்வது மிகவும் கஷ்டமாக உள்ளது.

பிரதான வீதி ஒரே குன்றும் குழியுமாகவும் கற்கள் கிளம்பிய நிலையில் காணப்படுகின்றது. (இ-111)

# கிளிநொச்சி செயலகத்தில் காணிப்பதிவு அலுவலகம்

### யாழ்ப்பாணத்தில் நடந்த பதிவு வேலைகள் மாற்றப்படும்

கிளிநொச்சி. ஜூலை 18

கிளிநொச்சி மாவட்ட அரச செயலகத்தின் காணிப்பதிவகக் கட்டட திறப்பு விழா அண்மையில் நடைபெற்றது.

கிளிநொச்சிப் பதில் உதவி அரசாங்க அதிபர் திரு.எஸ்.வேலுப்பிள்ளை கட்டடத்தைத் திறந்து வைத்தார்.

கிளிநொச்சி மாவட்டம் தனி மாவட்டமாகியதைத் தொடர்ந்து கிளிநொச்சியின் முதல் அரசாங்க அதிபராக இருந்த திரு. ஜெகநாதனால் ஆரம்பித்து வைக்கப்பட்ட இக் கட்டட வேலைகளை கிளிநொச்சி அம்பாள்நகர் கிராம அபிவிருத்திச் சங்கம் ஒப்பந்த அடிப்படையில் கட்டி முடித்துள்ளது.

சுமார் 4½ லட்சம் ரூபா செலவில் அமைந்துள்ள இக்கட்டடத்தில் காணிப்பகுதியின் வரைபட அறை, காணிப் பதிவேட்டுப் பகுதி, இறப்புப் பிறப்புப் பதிவுகாரர் அலுவலகம் என்பன அமைந்துள்ளன,

இதுவரை யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சிக்கு வந்துசேராத காணிப்பதிவகம்,பிறப்பு இறப்புப் பதிவகம் என்பன இக் கட்டட வேலைகள் பூர்த்தி அடைந்ததைத் தொடர்ந்து வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கான நடவடிக்கைகளைக் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் மேற்கொண்டுள்ளார். இதனால் கிளிநொச்சி மாவட்டப் பதிவுகள் அனைத்தும் இங்கு செய்துகொள்ள வாய்ப்பு ஏற்படும். (இ-79)

## பஸ் சேவையை மீண்டும் ஆரம்பிக்க கோரிக்கை

கொடிகாமம் ஜூலை 18

விவசாயிகளின் நலன் கருதி கிளிநொச்சியிலிருந்து கண்டாவளை சென்று யாழ்ப்பாணம் வரும் இ. போ. ச பஸ் சேவையை மீண்டும் ஆரம்பிக்குமாறு கண்டாவளைவிவசாயிகள், வர்த்தகர்கள், பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-75)

## கடற்படை முகாம் மீது மோதிய மினிவான்

காரைநகர், ஜூலை 18

மினிவான் ஒன்று காரைநகர் கடற்படை முகாமின் முள்ளுக்கம்பி வேலியுடன் மோதியதைத் தொடர்ந்து துப்பாக்கிப் பிரயோகம் இடம்பெற்றது.

இந்தச்சம்பவம் பற்றித் தெரியவருவதாவது:–

இரவு நேரம் வந்த பிரஸ்தாப மினிவான் முகாமின் முள்வேலியு[illegible] அதனைத்தொடர்ந்து [illegible] நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது.

கடற்படையினர் வான் அருகில் சென்று பார்த்தபோது அதன் சாரதி மதுபோதையில் இருந்தது தெரியவந்தது.

சாரதியை விசாரணை செய்தபின்னர் படையினர் வானைச் செல்ல அனுமதித்தனர்.

இந்தச் சம்பவத்தில் [illegible] வில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (க-73)

## மாவை உற்சவ காலத்தில் பாதுகாப்புச்சேவை

யாழ்ப்பாணம், ஜூலை18

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் வருடாந்த உற்சவம் நாளை 19 ஆம் திகதி முதல் ஆகஸ்ட்மாதம் 13 ஆம் திகதி வரை நடைபெற உள்ளது.

இந்த உற்சவ காலத்தின்போது தெல்லிப்பழை பாதுகாப்புச் சேவையினர் இங்கு பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடஉள்ளனர்.

இரவு பகல் தொடர்ச்சியாக 24 மணி நேரமும் பாதுகாப்பு நடவடிக்கைகளில் இவர்கள் ஈடுபடுவர் இவர்களில் பெண் பாதுகாவலர்களும் அடங்கி உள்ளனர். (இ-9)

**DIPLOMA IN NURSING**

9-ஆம் பிரிவுக்கான புதிய தாதிப் பயிற்சி நெறி

**ஆரம்பம்: 27 - 7 - 1988**

அரசாங்க தகுதிபெற்ற மருந்தாளர், தாதியர், பல்கலைக்கழக வைத்தியர் அடங்கிய விரிவுரையாளர் குழு.

மேலதிக விபரங்களுக்கு:

**NORTH CEYLON TECHNICAL INSTITUTE**
14, St.Peters Lane,
JAFFNA.

(C 5879)

**NEW Master INSTITUTE**

B. M. C. Lane, JAFFNA.   241, Navalar Road, JAFFNA.

**A/L 90**

பிரிவு:- II

**ஆரம்பம்: 24-07-88 9. 30 மணி**

| | |
|---|---|
| Zoology | – 9-30 - 10-30 |
| Botany | - 10-30 - 11-30 |
| Chemistry | - 11-30 - 12-30 |
| Physics | - 12-30 - 1-30 |
| Pure / Applied } Maths | - 9-30 - 11-30 |

(எமது வழமையான ஆசிரியர் குழுவினால்)

★ பிரிவு Iக்குரிய அனுமதிகள் கண்டிப்பாக நிறுத்தப்பட்டுள்ளன.

★ ஒவ்வொரு பிரிவுக்கும் 300 மாணவர்களுக்கு மட்டுமே அனுமதி வழங்கப்படும். (C-5875)

**JAFFNA COLLEGE INSTITUTE OF TECHNOLOGY**
VADDUKKODDAI

The only Full-Time Technical Educational Institute in the North. providing facilities of Hostel, Library and Sports Extra Curricular Activities.

**1988 AUGUSTஇல் பின்வரும் பயிற்சி நெறிகள் தொடங்கவுள்ளன.**

**A. TECHNICIAN DIPLOMA COURSES** (ஆங்கில மூலம்)
1. Civil Eng. 2. Mechanical Eng. 3. Electrical Eng.
4. Electronics Eng.
**கல்வித்தகைமை:** G. C. E. (O/L)ல், கணிதம், விஞ்ஞானம் இரண்டிலும் திறமைச்சித்தி உட்பட 6 பாடங்களில் சித்தி.
**வயது, பால்:** 21+க்குட்பட்ட இருபாலாரும்.
**காலம்:** Civil, 2 ஆண்டு; மற்றவை 3 ஆண்டுகள்.

**B. DIPLOMA COURSES** (ஆங்கில மூலம்)
1. Draughtsmanship (Civil)
2. Computer Programming & Data Processing (Module - I - basic, Module – 2 - Cobol)
**கல்வித்தகைமை:** G. C. E. (O/L)ல், கணிதத்தில் திறமைச் சித்தி உட்பட, 6 பாடங்களில் சித்தி.
**வயது, பால்:** 22 க்குட்பட்ட இருபாலாரும்.
**காலம்:** ஓராண்டு.

**C. CRAFT GERTIFICATE COURSES** (தமிழ் மூலம்)
1. இயந்திரசாலைப் பயிற்சி (Machine Shop)
2. ஒட்டுதல் (Welding)
3. உலோக வார்ப்பு (Foundry)
4. மின் இணைப்பு (Wiring)
**கல்வித் தகைமை:** G. C. E. (O/L) படித்திருக்க வேண்டும்.
**வயது, பால்:** 21+க்குட்பட்ட ஆண்கள்.
**காலம்:** ஓராண்டு

**D. TRADE CERTIFICATE COURSES** (தமிழ் மூலம்)
1. மேசன் வேலை (Masonry)
2. தச்சு வேலை (Carpentry)
**கல்வித் தகைமை:** 8-ஆம் வகுப்பு.
**வயது, பால்:** 21 வயதுக்குட்பட்ட ஆண்கள்.
**காலம்:** 3 மாதம்.

நிறுவன அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளக்கூடிய விண்ணப்பப் பத்திரங்களில் மட்டுமே விண்ணப்பிக்கவும். பத்திரங்களை ரூபா 5/- செலுத்தி நேரடியாகவோ அன்றி ஒரு ரூபா பெறுமதியுள்ள ஆறு முத்திரைகளை அனுப்பி தபால் மூலமோ பெற்றுக்கொள்ளலாம்.

**விண்ணப்ப முடிவு திகதி : 30 July 1988.**

நேர்முகப் பரீட்சைக்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

(C 5861) — பணிப்பாளர்

**ஈழத்திலும்**

**சாயி ரவல்ஸ் அன் ருர்ஸ்**

- ✶ பகவான் சத்தியசாயிபாபா நேரடிதரிசனம்
- ✶ தென்னிந்திய புனித ஸ்தல யாத்திரை
- ✶ நம்பிக்கையான (CANADA) பயண ஒழுங்கு

மேலதிக விபரத்திற்கு தொடர்புகொள்ளவேண்டிய முகவரிகள்:

கிளை: 24/11 பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.

தலைமையகம்: 33, 1ஆவது மாடி, புதிய ஜெமினி கொம்பிளக்ஸ் **சென்னை - 6**
தொலைபேசி: 475382.

✶ குறிப்பு: தென்னிந்திய புனித ஸ்தல யாத்திரை **10 . 8 . 88 ஆரம்பம்**

(C 5710)

**பிரயாண ஒழுங்குகள்**

**குவைத், சவூதி அரேபியா, பஹாரின்**

ஆகிய நாடுகளுக்கு வேலை வாய்ப்புகளுடன் துரிதகதியில் பிரயாணம் செய்ய

இன்றே நாடுங்கள்

**கோல்டன் ரவல்ஸை**

- ✶ ஆஸ்பத்திரி கிளினேர்ஸ்
- ✶ எயர்போர்ட் கிளினேர்ஸ்
- ✶ பாடசாலை கிளினேர்ஸ்
- ✶ HOUSE MAID

மற்றும் பலதரப்பட்ட வேலைகள் எம்மிடம் உண்டு.

**முற்பணம் அறவிடப்படமாட்டாது.**

பிரயாணம் செய்ய கடவுச்சீட்டுத் தந்தவர்கள் ஒழுங்குகள் அனைத்தும் செய்யப்பட்டபின் பிரயாணம் செய்யத் தவறின் கடவுச்சீட்டு திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

**காரியாலயம் தினசரி காலை 8.30 முதல் மாலை 5.00 மணி வரை திறந்திருக்கும்.**

**உங்கள் தேவையே எங்கள் சேவை**

தலைமைக் காரியாலயம்:

**கோல்டன் ரவல்ஸ்&ருர்ஸ்**
புகையிரத நிலைய வீதி, சுன்னாகம்.

கிளை 1. **கோல்டன் ரவல்ஸ் & ருர்ஸ்**
குப்பிளான் சந்தி,
குப்பிளான்.

கிளை 2. **கோல்டன் ரவல்ஸ் & ருர்ஸ்**
வன்னிச்சி கோவிலடி,
வல்வெட்டி.

(C 5871)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE EXPRESS INSTITUTE KOPAY

A/L-90

கலை / வர்த்தகம்
விஞ்ஞானம்
கணிதம்

24 மாத கால பயிற்சிவகுப்பு
புதிய பிரிவுகள்
ஆரம்பமாகியுள்ளன.

★ வடமாகாணத்தின் தலைசிறந்த
ஆசிரியர் குழுவின்
ஒருங்கிணைந்த சேவை

★ பிறவிபரங்கள் அலுவலகத்தில் ★

(C/5852)

DIPLOMA IN PHARMACY

புதிய பாமஸி பயிற்சி நெறி

ஆரம்பம் 30 - 07 - 1988

உங்கள் பதிவுகட்கு:
NORTH CEYLON TECHNICAL INSTITUTE
14, St.Peters Lane,
JAFFNA.

(C 5880)

வெளிநாட்டு
வேலைவாய்ப்பு

1. Saudi Arabia:
சவூதி அரேபியா:

Saudi Operation & Maintenance Company Limited

S. O. M. C.

| | | |
|---|---|---|
| 1. | Electrician | — SR 600 |
| 2. | Mechanic | — SR 600 |
| 3. | A/C. Technician | — SR 700 |
| 4. | Electrical Engineer | — SR 2000 |
| 5. | Plumper | — SR 600 |
| 6. | Drivers | — SR 600 |
| 7. | Masons | — SR 600 |
| 8. | Carpenters | — SR 600 |
| 9. | Eletronic Technician | — SR 700 |
| 10. | Telephone Technician | — SR 600 |
| 11. | Telephone Operetor | — SR 700 |
| 12. | Power Plant Operetor | — SR 700 |
| 13. | Power Plant Mechanic | — SR 700 |
| 14. | Power Plant Electrician | — SR 700 |
| 15. | Painter | — SR 600 |
| 16. | Welder | — SR 600 |

WITH FOOD ALLOWANCE
Age - 21 - 49 years
FLIGHT: 15-9-88 க்கு
முன் பயணம்

2. Kuwait: குவைற்:

United Shiping Company Cleaners

300 Vacancies - Salary 30 K.D

மேற்படி விபரம் அறிய உடன் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

T.V. TRAVELS & TOURIST
BROWN ROAD,
(Railway Station Front)
KOKUVIL.

(C 5869)


## சடலங்கள் அடையாளம் காணப்பட்டன

கிளிநொச்சி, ஜூலை 18

பரந்தன் சூட்டுச் சம்பவத்தில் இறந்தவர்களில் இரண்டு பேரின் சடலங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

தேவன் - சுசிலா (17 வயது) விசுவமடுவில் ஏற்பட்ட பதற்ற நிலை காரணமாக இவர் மீசாலைக்கு வரும் வழியில் பரந்தனில் நடைபெற்ற சூட்டுச்சம்பவத்தில் மரணமானார்.

மற்றவர், டிங்கிரி பண்டா (வயது 27) என்பவர். கடை ஒன்றில் ஊழியராகக் கடமையாற்றி வந்தவர்.

இருவரது சடலங்களும் கிளிநொச்சி மாவட்ட வைத்திய சாலையில் வைக்கப்பட்டிருந்தன.

இதேவேளை கிளிநொச்சி மாவட்ட சட்ட வைத்திய அதிகாரி சுகவீன லீவில் சென்றிருப்பதால் சடலங்களின் பிரேத பரிசோதனை தாமதிப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-76)

## குடும்பஸ்தர் தற்கொலை

வடமராட்சி, ஜூலை 18

இளம் குடும்பஸ்தர் ஒருவர் தூக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டார்.

அல்வாய் தெற்கு மங்களிமூலை என்னும் இடத்தில் இச்சம்பவம் நடந்தது. (இ-160)

# கிளிநொச்சி கிராமங்களில் தபால் விநியோகம் பாதிப்பு

கிளிநொச்சி, ஜூலை 18

பாரதிபுரம், ஆனந்தபுரம், தொண்டமான் நகர், காந்திநகர் ஆகிய இடங்களிலுள்ள காணிகளுக்கு காணி அலுவலகம் காணி அனுமதிப் பத்திரம் வழங்கி அங்கீகரிக்கப்பட்ட கிராமங்களாக்கி உள்ளதால் உடனடியாக மேற்படி பகுதிகளுக்குத் தபால் சேவகர்களை நியமிக்குக.

மேற்கண்டவாறு இப்பகுதிப் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதுபற்றிக் கூறப்படுவதாவது:-

கிளிநொச்சித் தபாலகத்தின் மேற்பார்வையின் கீழே தபால் விநியோகம் மேற்கொள்ளப்படும் இடங்களில் முறிகண்டிப்பகுதியும் ஒன்று.

முறிகண்டிப்பகுதிக்கு கிளிநொச்சித் தபால் நிலையத்திலிருந்து தபால் சேவகர் கடிதங்களை எடுத்துச் சென்று முறிகண்டிக் கோவில்ப் பகுதிக்கும் அங்குள்ள கடைகள், வீடுகள் என்பனவற்றுக்கும் விநியோகித்து வருவது நடைமுறையில் உள்ளது.

இத்தபால் சேவகரே முறிகண்டி செல்லும் பாதையில் கிளிநொச்சியிலிருந்து முறிகண்டி வரையிலான பகுதியில் பிரதான வீதியில் உள்ள கடைகளுக்கும் விவசாய ஆராய்ச்சி நிலையம், விவசாயப் பயிற்சி நிலையம், கியூம்பைக் கொம்பனி, இளைஞர்சேவை மன்றப் பயிற்சி நிலையம், பட்டுப்பூச்சி நிலையம் (தற்போதைய பல்கலைக்கழக விவசாய பீடம்) என்பனவற்றுக்கும் தபால்களை விநியோகித்துச் செல்வது வழக்கம்.

இதனால் பாரதிபுரம், தொண்டமான்நகர், காந்திநகர், 155 ஆம் கட்டை, 156 ஆம் கட்டை, இரத்தினபுரம் பகுதி, ஆனந்தபுரம் ஆகிய கிராமத்துள் வசிப்பவர்கள் தமது கடிதத் தொடர்புகளை பிரதான வீதியில் இருக்கும் கடைகளின் விலாசத்தைக் கொடுத்துப் பெற்றுவந்தனர்.

மேற்படி கிராமங்களினுள் தபால் விநியோகம் மேற்கொள்ளக் கோரியபோது மேற்கூறப்பட்ட கிராமங்கள் காணி அலுவலகத்தினால் அங்கீகரிக்கப்படவில்லை எனவும் வீதிகள் சீராக இல்லை எனவும் காரணம் காட்டப்பட்டதாம்.

இதனால் தபால் விநியோகம் மேற்கொள்ளப்படாதிருந்தது.

இதனாலேயே இக்கிராம வாசிகள் பிரதான வீதியிலுள்ள கடைகளின் முகவரியில் கடிதங்களைப் பெற்று வந்தனர்.

ஆனால் கடந்த சில மாதங்களாக எதுவித அறிவித்தலும் இன்றி கடைகளுக்கு விநியோகிக்கப்பட்டுவந்த தபால் விநியோகமும் தடைப்பட்டு விட்டது. (இ-76)

## வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டிகள்

சாவகச்சேரி, ஜூலை 18

சாவகச்சேரி வள்ளுவர் சனசமூக நிலைய அறவழிப்பாலர் பாடசாலையின் வருடாந்த இல்ல விளையாட்டுப்போட்டிகள் அறவழிப்போராட்டக் குழுத் தலைவர் திரு. வி. எஸ். துரைராசா தலைமையில் நடைபெற்றன.

உதவி அரசாங்க அதிபர் திரு. பு. சுந்தரம்பிள்ளை பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்.

தென் இந்திய திருச்சபையின் குருவானவர் வண. பிதா சாம் தம்பு சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார். (இ-31)

## ஆவரங்கால் இந்து இளைஞர் சம்பியன்

யாழ்ப்பாணம், ஜூலை 18

புத்தூர் வினஸ் விளையாட்டுக்கழகம் நடத்திய 24 ஆவது உதைபந்தாட்ட இறுதிப் போட்டியில் 7 பேர் கொண்ட ஆட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகம் வெற்றிபெற்றது.

# திருமலை மரக்கறிச் சந்தை திறந்து வைக்கப்பட்டது

## 62கடைகளில் தமிழருக்கு 33 சிங்களவருக்கு 22

திருகோணமலை, ஜூலை18

திருகோணமலையில் புதிய மரக்கறிச் சந்தை சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது.

இந்திய அமைதிப் படையின் கிழக்குப் பிராந்தியத் தளபதி மேஜர் ஜெனரல் ஜமீல் மகமுத், இலங்கை இராணுவத்தின் திருமலை இணைப்பதிகாரி பிரிகேடியர் டென்சில் கொப்பேகடுவ ஆகிய இருவரும் குத்துவிளக்கேற்றி சம்பிரதாய பூர்வமாக இதனைத் திறந்து வைத்தனர்.

வைபவத்தில் இந்திய அமைதிகாக்கும் பிரிவின் திருமலைத்தளபதிஎம்.டி. மிஸ்ரா உட்பட பல இந்திய— இலங்கை இராணுவ உயர் அதிகாரிகளும், திருமலை மேலதிக அரசாங்க அதிபர் திரு. எஸ். கிருஷ்ணமூர்த்தி, பிரஜைகள் குழுத்தலைவர் திரு. பா. விஜயநாதன் உட்பட பல பொதுமக்களும் கலந்து கொண்டனர்.

திறப்பு விழாவுக்கு வருகை தந்த அதிகாரிகளை வாசலில் வைத்து நகர சபையின் செயலாளர் திரு.எம். சிவகுருநாதன் உட்பட பல அதிகாரிகள் மலர் மாலைகள் அணிவித்து வரவேற்றனர்.

மொத்தமுள்ள 62 கடைகளில் 33 தமிழர்களுக்கும், 22 சிங்களவர்களுக்கும், 7 முஸ்லிம்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன.

அன்றைய தினம் மரக்கறி வியாபாரிகளில் சிறு எண்ணிக்கையினரே வியாபாரத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இந்த மரக்கறிச் சந்தையைப் புதுப்பிப்பதற்காக புனர்வாழ்வு அமைச்சினால் 1லட்சத்து 80ஆயிரம் ரூபா நகர சபைக்கு வழங்கப்பட்டது.

இதில் ஒரு தொகை புதுப்பிப்பதற்காகச்செலவிடப்பட்டுள்ளது. மிகுதியைக் கொண்டுமேலும் பல கடைகள் கட்டப்படும்.

சுற்றிவர மதில் போடப்பட்டு இரண்டு வாசல்களே அமைக்கப் பட்டுள்ளன.

ஒன்று டொக்யாட் வீதியிலும் மற்றது பிரதான வீதியிலும் அமைந்துள்ளது.

முன்னர் மத்திய வீதிப் பக்கம் இருந்த வாசல் மூடப்பட்டுள்ளது.

இந்தச் சந்தைக்கு எதிரிலுள்ள பஸ் நிலையத்தில் இந்திய அமைதிகாக்கும் பிரிவினரின் முகாம் ஒன்று இருக்கின்றது.

சந்தைக்கு அருகிலுள்ள சிங்களவருக்குச் சொந்தமான வீட்டுக் கூரையின் மேல் இந்திய அமைதிப்படையின் 'சென்றி' யும் அமைந்துள்ளது.

இதேவேளை கனகம்மில் பகுதியில் இயங்கி வந்த தமிழரின் மரக்கறிச் சந்தையும் தொடர்ந்து இயங்கி வருகிறது. (இ-150)

## எல்லை நிர்ணயக்குழு அறிக்கை ஜனாதிபதியிடம்

கொழும்பு, ஜூலை 18

எல்லை நிர்ணயக்குழுவின் அறிக்கை ஜனாதிபதியிடம் கையளிக்கப் பட்டது.

ஜனாதிபதி செயலகத்தில் இந்தநிகழ்ச்சி இடம் பெற்றது.

குழுவின் தலைவரான ஓய்வுபெற்ற நீதியரசர் எச். ரொட்ரிகோ அறிக்கையை திரு. ஜெயவர்த்தனாவிடம் ஒப்படைத்தார்.

குழுவின் ஏனைய உறுப்பினர்களான திரு. எம். சிவநாதன், ஏ.எம். எம். சஹாப்தீன் ஆகியோரும் அப்போது சமுகமளித்திருந்தனர்.

இந்த ஆணைக்குழு சென்ற மாதம் 2ஆம் திகதிநியமிக்கப்பட்டது.

பத்துக்கும் இருபதுக்கும் உட்பட எம்பிக்களைக் கொண்ட தேர்தல் மாவட்டங்களை இரண்டு தேர்தல் வலயங்களாகவும்—

இருபதுக்கு மேற்பட்ட எம்பிக்களைக் கொண்ட தேர்தல் மாவட்டங்களை இரண்டுக்கு மேற்பட்ட வலயங்களாகவும் பிரிப்பது குறித்து 6 வாரங்களுக்கு இடையில் அறிக்கை சமர்ப்பிக்கும்படி [illegible] ஜனாதிபதி பணித்திருந்தார். (இ-[illegible])

மானிப்பாய்

## தபாற் கந்தோருக்கு நிரந்தரக்கட்டடம்இல்லை

மானிப்பாய், ஜூலை 18

மானிப்பாய் தபாற் கந்தோருக்கான நிரந்தர கட்டடம் இல்லாததால் அங்கு வேலை செய்யும் ஊழியர்களும் பொதுமக்களும் பெரிதும் சிரமத்திற்குள்ளாகிறார்கள்.

வசதியாக அமைந்திருந்த மானிப்பாய் தபாற்கந்தோர் கட்டடம் அண்மைக்கால அசம்பாவிதங்களால் முற்றுச் சேதமடைந்ததைத் தொடர்ந்து தற்காலிகமாக தனியார் ஒருவரின் வீட்டில் வைத்து தபாலக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தபாற் கந்தோர் அமைக்கக் கூடிய முடிக்குரிய காணிகள் பல இப்பகுதியில் இருப்பதால் அங்கு தபாலகத்தை நிறுவி நடவடிக்கைகளை சுலபமாக்க தபால் திணைக்கள அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என தபாலக அதிகாரி ஒருவர் கருத்துத் தெரிவித்தார். (இ-90)

## பழுதடைந்த வீதி

கொடிகாமம், ஜூலை 18

கெளாலியிலிருந்து எழுதுமட்டுவாள் செல்லும் பிரதான வீதி பழுதடைந்து மிகவும் மோசமான நிலையில் காணப்படுகிறது. (இ-75)


Vacancies for Engineers
in
PALACE AT OMAN

Positions Vacant

Mechanical, Civil Structural, Electrical and Architectural Engineers.

Must be fully Qualified with Degree and Chartered.

15 Years Experience.

Salary will be fixed by Oman Government according to Service and Qualifications.

Please Contact Immediatly
K. THAMPIPILLAI
Sithankerny,
(Near Vairavar Kovil.)

(C 5877)

யாழ்ப்பாணம் பல. நோ. கூ. சங்கம்
வரையுள்ளது

3 வது சுற்று இலவச விநியோகம்

3 ஆவது சுற்று இலவச விநியோகம் 20-7-88 உடன் முடிவுற இருப்பதால் இது வரை மேற்படி இலவச விநியோகப் பொருட்களைப் பெற்றுக் கொள்ளத் தவறிய பாவனையாளர்கள் 20-7-88 க்கு முன் தமது கிளைகளில்/உத்தரவு பெற்ற வியாபாரிகளிடம் மேற்படி உணவுப் பொருட்களைப் பெற்றுக் கொள்ளும்படி அறியத்தருகிறேன். 20-7-88 க்குப் பின் 3ஆவது சுற்று இலவச விநியோகத்துக்குரிய பொருட்கள் எக்காரணம் கொண்டும் வழங்கப்படமாட்டாது என்பதையும் அறியத் தருகிறேன்.

பொது முகாமையாளர்.
259, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
15-7-88

(C 5862)

பிறந்தநாள் ஞாபகார்த்தம்
18 - 7 - 88



ஜெயதாசன் ஆரணி (தங்கா)

இன்றிருந்தால் உன் வயது
என்ன சொல்லு பார்ப்போம்?
அன்றிருந்து இன்று வரை
ஆண்டு பதினொன்றுருகுதடி
சென்றிருந்து அம்மனுடன்
செகத்தினிலே எங்களையும்
அன்போடு காத்திடுவாய்
அன்புள்ள ஆரணியே!

பூவோடு பூவாசப்
பூத்துக் குலுங்குகிறாய்
தாயோடு தந்தையுடன்
தங்கியேன் நிற்கவில்லை?
ஆறாது எம் கவலை
ஆரணங்கே ஆரணியே
மாறாது நின் கருணைமழை
மறவாது பொழிந்திடுவாய்.

பெற்றோர், உறவினர்.

புதுவீடு,
கருகம்பானை,
காங்கேசன்துறை.

(5075)

முதலாவது ஆண்டு நினைவஞ்சலி



சின்னத்துரை காங்கேசன்

மண்ணகம்: 22- 1- 1957
விண்ணகம்: 18- 7- 1987
திதி:- 5- 8- 1988

(லங்கா சீமெந் லிமிட்டெட் கரிமில் இயக்குனர்)

''நேச பணி யாற்றுவதற்கே
நேர் தோட்டம் சென்றவரே!
காசினியைக் கைவிடவே
கால விதி வந்ததுவோ?
பாசமுள்ள அன்னை தந்தை
மற்றோர்ந்த சுற்றத்தார்
தேசுளனும் காங்கேயன்
பிரிவாற்று தழுகின்றார்''

கௌானை
கொல்லங்கலட்டி,
தெல்லிப்பழை.
(5321)

உங்கள் மறைவால் துயருறும்
அம்மா, அப்பா
சகோதரர்கள், மற்றும்
உறவினர்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பொய்யாமொழி

**குறள்:**

துண்ணியம் என்பார் அளக்குங் கோல் காணுங்கால்
கண்ணல்லது இல்லை பிற.

**பொருள்:**

''யாம் நுட்பமான அறிவுடையேம்'' என்று பிறர் கருத்தை அறிபவரின் அளக்குங்கோல், ஆராய்ந்து பார்த்தால் அவருடைய கண்களே அல்லாமல் வேறு இல்லை.


# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

இல:- 292/2 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி 24805 22703
18-07-1988 த. பெ. இல. 23


## விவசாயம் குன்றலாமா?

விவசாயிகள் ஓய்வூதியத் திட்டம் யாழ்ப்பாணக் குடாநாட்டிலும் நடைமுறைக்கு வந்திருக்கிறது. என்னும், குறிப்பிட்ட சில பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகளே ஓய்வூதியத் திட்டத்தில் சேர்வதற்கு அதிக எண்ணிக்கையில் ஆர்வம் காட்டுவதாகச் சொல்லப்படுகிறது.

ஓய்வூதியம் என்பது ஒருவரின் முதுமைப் பருவத்தில் ஏற்படக்கூடிய நிதிக் கஷ்டங்களைத் தவிர்க்க வல்லது. மாதாந்தம் நிச்சயமான ஒரு வருமானத்தை உறுதிப்படுத்துவது. அடுத்தவர் தயவில் வாழ்க்கை நடத்தும் அவசியத்தை நீக்குவது. பிறருக்குத் தொல்லையாக அல்லது பாரமாக இருக்காமல் நிம்மதியாக வாழத் துணை செய்வது.

இத்தனை நன்மைகளையும் உள்ளடக்கியதால் தான் ஓய்வூதிய வசதி உள்ள அரசாங்க சேவைக்குப் பெரும் மதிப்பும் மவுசும் இருந்தது. 'கோழி மேய்த்தாலும் கோர்ணமேந்திலை மேய்க்க வேணும்' என்ற சொற்றொடரும் உருவாகியது.

அரசாங்க ஊழியர்களுக்கு மட்டும்தான் ஓய்வூதியம் என்ற நிலை மாறி, ஏனைய சாராருக்கும் அந்த வசதி செய்யப்படும் நிலை வந்துவிட்டது. தனியார்துறை ஊழியர், சுயதொழில் செய்பவர்கள் ஆகியோருக்கும் ஓய்வூதியத் திட்டங்களை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

விவசாயிகள் ஓய்வூதியத் திட்டம் வெற்றிகரமாக நடைமுறைக்கு வந்துள்ளது. தனியார்துறை ஊழியர்களின் சேமலாப நிதியை ஓய்வூதியமாக்கப் போவதாக அறிவித்தல்கள் வந்த போதிலும் அது இன்னும் நடைமுறைக்கு வரவில்லை. சுயதொழில் செய்யும் ஏனைய துறையினர்களுக்கும் ஓய்வூதியத் திட்டம் அறிமுகப்படுத்தப்படும் என அறிவிக்கப்படுகிறது.

அந்த வகையில் விவசாயிகள் அதிர்ஷ்டசாலிகள் எனக் கருத வேண்டும் நாட்டின் உழைப்பாளிகளில் பெரும்பான்மையானோர் விவசாயிகள் ஆதலால், விவசாய ஓய்வூதியத் திட்டம் முதலில் அமுலுக்கு வர வாய்ப்பு உண்டானது என்றும் கூறலாம்.

ஓய்வூதியத்துக்கு முக்கிய இடம்கொடுத்த குடாநாட்டில், விவசாயிகள் தங்களுக்குக் கிடைத்துள்ள வாய்ப்பைத் தக்கபடி பயன்படுத்தத் தொடங்காமைக்குக் காரணம் என்ன?

குடாநாட்டில் போதிய அளவு தண்ணீர் வசதி இல்லை என்ற குறை ஒன்றே விவசாயிகளைப் பிரதானமாகப் பாதித்து வந்தது. இப்போது அவர்கள் தொழில் செய்வதே பெரும் சாதனையாகக் கருதும் அளவுக்குப் பல வித கஷ்டங்கள். புறச்சூழ்நிலைகளும், விவசாயத்தை நிம்மதியாக, நினைத்த நேரத்தில், வேண்டிய விதத்தில், உரிய காலத்தில் செய்ய அனுமதிப்பதாக இல்லை.

பெரும் கஷ்டங்களின் மத்தியில் தொழில் செய்து பொருள்களை விளைவித்தாலும், உரிய சந்தை வசதி இல்லாமை, போதிய விலை கிடையாமை ஆகியவற்றால் குடாநாட்டு விவசாயிகள் நஷ்டமடையவும் நேரிடுகிறது.

அசாதாரணமான சூழ்நிலையில், பெரும் சிரமங்கள், கஷ்டங்கள் மத்தியில் குடாநாட்டு விவசாயிகள் நெற்றி வியர்வையை நிலத்தில் சிந்தி, மாடாகக் கஷ்டப்பட்டு உழைத்தாலும் அதற்குரிய பலன் கிடைப்பதாக இல்லை.

இவ்வாறு கஷ்டமுறும் குடாநாட்டு விவசாயிகளுக்கு, நிவாரண, ஊக்குவிப்பு வசதிகள் எதையும் செய்ய அரசு இதுவரை நடவடிக்கை எடுத்ததாக இல்லை.

அதனால் ஓய்வூதியம், காப்புறுதி ஆகிய சமூகநலத் திட்டங்களில் சேரக்கூடிய வருமானம், நிதிவசதி அவர்களுக்கு இல்லை.

இதனை இங்குள்ள அதிகாரிகள் உணர வேண்டும். தங்கள் மேலிடங்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும். குடாநாட்டு விவசாயிகளுக்கு விசேட நிவாரண, நஷ்டஈட்டு, ஊக்குவிப்புத் திட்டங்களை அறிமுகப்படுத்த ஏற்பாடு செய்யவேண்டும். தங்களுக்கு அதிகாரம் இல்லை என்று கூறி நழுவப் பார்க்காமல், ஆகக் குறைந்தது முயற்சியாவது செய்யவேண்டும்.

விவசாயம் குடாநாட்டில் குன்றிப்போகாமல் பார்ப்பதில் தொண்டர் நிறுவனங்களும் முன்னின்று உழைக்கலாம்.

அதற்கான முயற்சியில் விவசாயிகள் கழகங்கள் மற்றும் சமூகநல இயக்கங்களும் ஈடுபட வேண்டும்.

அஸர்பைஜான், ஆர்மெனியா

# மாநிலங்களுக்கு இடையிலான தகராறு;

# சோவியத் சுப்ரீம் கவுன்ஸில் இன்று ஆராய்வு

மாஸ்கோ ஜூலை - 18

அஸர்பைஜான், ஆர்மெனியா மாநிலங்களுக்கு இடையேயான இனமோதலை முடிவுக்குக் கொண்டு வருவது பற்றி ஆராய சோவியத் அரசின் சுப்ரீம் சவுன்ஸில் திங்கள் கூடுகிறது.

அஸர்பைஜான் மாநிலத்துடன் உள்ள சரபா பகுதியை ஆர்மெனியா மாநிலத்துடன் மீண்டும் இணைக்கும்படி கோரி ஆர்மெனியா மக்கள் ஆர்ப்பாட்டம் நடத்தி வருகின்றனர். 1942 இல் சரபா பகுதி ஆர்மெனியாவில் இருந்து பிரித்து எடுக்கப்பட்டு அஸர்பைஜான் மாநிலத்துடன் இணைக்கப்பட்டது.

அஸர்பைஜான் ஈரான் எல்லையுடன் உள்ளது. அங்கு பெரும்பான்மையினர் முஸ்லிம்கள்.

இதன் மத்தியில் ஆர்மெனியா மாநிலத்தில் உணவுப் பற்றுக்குறை ஏற்பட்டுள்ளது.

சரபாபகுதியை ஆர்மெனியாவுடன் இணைக்கக் கூடாது என்று அஸர்பைஜான் மாநில கவுன்ஸில் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

இணைக்கக் கோரி ஆர்மெனியா மாநிலக் கவுன்ஸில் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. இந்த நிலையில் சோவியத் சுப்ரீம் கவுன்ஸில் (இன்று) திங்கள் கூடி முடிவு எடுக்கவுள்ளது. (எ)

## வார்ஸோ மாநாடு முடிவடைந்தது

வார்ஸோ ஜூலை 17

வார்ஸோ நாடுகளின் தலைவர்கள் மாநாடு நேற்று முடிவடைந்தது. பதினொரு கம்யூனிஸ்ட் நாடுகள் மாநாட்டில் கலந்து கொண்டன.

சோவியத் தலைவர் கோர்பச்சேவ் முக்கிய பேச்சை நிகழ்த்தினார்.

மரபு வழி ஆயுதங்களைக் குறைப்பது குறித்துநேட்டோ அமைப்பு நாடுகளுடன் பேச்சுக்களைத்தொடங்கவேண்டும் என்று இம்மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது.

இப்பேச்சுக்கள் இவ்வருட இறுதியில் ஆரம்பமாக வேண்டுமென்றும் மாநாட்டில் முடிவு செய்யப்பட்டது. (எ)

தமிழகத்தில்

## பஸ்ஸை மறித்து தாக்கியதில் 8 பேர் பலி!

மதுரை, ஜூலை 17

அரசு பஸ் ஒன்றை மறித்த ஆயுதம் தரித்த கோஷ்டி ஒன்று பஸ்ஸுள் ஏறி பயணிகளைத் தாக்கியது.

இச்சம்பவத்தில் 8 பயணிகள் உயிரிழந்தனர் என்று அறிவிக்கப்பட்டது.

இராமநாதபுரம் மாவட்டத்தில் கமுதி என்ற இடத்தில் இச்சம்பவம்நேற்றுப் பகல் இடம்பெற்றது.

பதினைந்து பேர் கொண்ட கோஷ்டியே இத்தாக்குதலை நடத்தியது - என்று பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ-எ)

அமெரிக்கா அறிவிப்பு:

## ஆப்கன் கெரில்லாக்களுக்கு தொடர்ந்தும் ஆயுதம்'

வாஷிங்டன், ஜூலை 17

ஆப்கன் கெரில்லாக்களுக்கான ஆயுத உதவியை அமெரிக்கா இன்னமும் நிறுத்தவில்லை.

இப்படி அமெரிக்க ராஜாங்க அமைச்சு நேற்றுத் தெரிவித்தது.

அமெரிக்காவின் அங்கீகாரத்துடன் கெரில்லாக்களுக்கு ஆயுதம் வழங்குவதை நிறுத்தி விட்டதாக பாகிஸ்தான் தெரிவித்ததாக வாஷிங்டன் போஸ்ட் செய்தி வெளியிட்டது.

அச் செய்தியை ராஜாங்க அமைச்சு மறுத்துள்ளது.

கெரில்லாக்களுக்கு பாகிஸ்தான் மூலம் ஆயுதங்கள் வழங்கப்பட்டு வருவதாக அமைச்சுப் பேச்சாளர் சொன்னார். (எ)

### அதிருப்தி

வாஷிங்டன், ஜூலை 17

ஜனாதிபதித் தேர்தலில் ஜனநாயகக்கட்சி சார்பில் உப ஜனாதிபதியாக வண ஜெஸிஜாக்ஸன் தெரிவு செய்யப்படாதது குறித்து ஜனநாயகக்கட்சி வட்டாரங்களில் கறுப்பின உறுப்பினர்கள் மத்தியில் அதிருப்தி ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. (எ)

## ஆப்கன் அதிபர் பாக் மீது கண்டனம்!

காபூல் ஜூலை 17

கெரில்லாக்களுக்குத் தொடர்ந்து உதவுவதாக பாகிஸ்தானை ஆப்கன் அதிபர் நஜிபுல்லா குற்றம் சாட்டினார்.

காபூல் மீது கடந்த வெள்ளி நடத்தப்பட்ட ரொக்கட் தாக்குதலில் 27 பொதுமக்கள் உயிரிழந்தனர்.

இத்தாக்குதலுக்குபின்னணியாக இருந்து பாகிஸ்தான் செயற்பட்டதாக அதிபர் நஜிபுல்லா தெரிவித்தார். (எ)

### வெங்கட் நாடு திரும்பினார்

புதுடில்லி, ஜூலை 17

சோவியத்யூனியன், மங்கோலியா நாடுகளில் தமது 11 நாள்சுற்றுப்பயணத்தை முடித்துக் கொண்டு இந்திய ஜனாதிபதி இராமசாமி வெங்கட்ராமன் நேற்று புதுடில்லி திரும்பினார். (எ)

வெளி உலகில்

### மெக்ஸிக்கோவில் ஆர்ப்பாட்டம்

மெக்ஸிகோசிட்டி, ஜூலை 17

மெக்ஸிகோ ஜனாதிபதி தேர்தலில் ஊழல்கள் இடம் பெற்றன என்று கூறி லட்சக்கணக்கானோர் நேற்று ஆர்ப்பாட்டஞ் செய்தனர் என்று அறிவிக்கப்படுகிறது.

### பஞ்சாப்பில் 8 பேர் கொலை!

சண்டிகார், ஜூலை17

பஞ்சாப்பில் கடந்த சனிக்கிழமை நடந்த மோதல்களில் எட்டுப் பேர் கொல்லப்பட்டார்கள்.

அவர்களில் ஒருவர் பொலீஸ் இன்ஸ்பெக்டர். ஏனையவர்கள் பொதுமக்கள்.

சீக்கியத் தீவிரவாதிகள் இத்தாக்குதலை நடத்தினர். (எ)

### 152 பேர் வெள்ளத்தில் மரணம்!

டாக்கா, ஜூலை 17

பங்களாதேஷில் ஏற்பட்ட வெள்ளத்தில் இறந்தவரின் எண்ணிக்கை 152 என்று அறிவிக்கப்படுகிறது.

நெடுங்கேணி மக்கள் ராஜீவுக்கு மகஜர்:

# ஒப்பந்தத்தை மீறுகின்றது இலங்கை அரசாங்கம்

## அதைக் கவனிக்கத் தவறியது ஏன்?

வவுனியா, ஜூலை 18

இலங்கை அரசு இலங்கை—இந்திய ஒப்பந்தத்தைத்தொடர்ந்து மீறி வருகின்றது. இதனைக் கவனத்தில் எடுத்துக் கொள்ளாமல் வேறுநடவடிக்கைகளில் இந்திய அரசு ஈடுபட்டு வருகிறது. இதனால் முன்னைய காலங்களை விட அதிகமான இன்னல்களை நாங்கள் அனுபவிக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது.

—இவ்வாறு நெடுங்கேணியில் பேரணிநடத்திய பொதுமக்கள், இந்தியப் பிரதமருக்கு அனுப்பி வைத்துள்ள மகஜரில் தெரிவித்திருக்கிறார்கள்.

இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்கு முகவரியிட்டு நெடுங்கேணிப் பகுதி இந்திய அமைதிப்படை அதிகாரிகளான பிரிகேடியர் ஜோசி, மேஜர் நாயர் ஆகியோர் ஊடாக அனுப்பி வைக்கப்பட்டுள்ள அம்மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

பாரம்பரியமாகத் தமிழ்மக்கள் வாழும் தமிழ்ப் பிரதேசத்தில் விவசாயத்தையும் வேறு சுய தொழில்களையுமே நம்பி நாம் வாழ்ந்து வருகிறோம்.

1958 ஆம் ஆண்டு முதல் தென்னிலங்கையில் காலத்திற்குக் காலம் இடம்பெற்றுவந்தஇனக் கலவரங்களினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களில் பெரும்பாலானோர் இப்பகுதிக்கு வந்து குடியேறினார்கள்.

ஆனால் இலங்கையில் ஆட்சிப் பொறுப்பேற்ற சிங்கள அரசாங்கங்கள் தமிழ்ப் பிரதேசங்களில் மேற்கொண்டு வரும் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களினால் நாங்கள் சொல்லிலடங்காத இன்னல்களை அனுபவித்துவந்தோம்.

இந்தவேளையில் பாரத அரசு எங்களுக்கு உதவி செய்யுமென்று எண்ணியிருந்தோம்.

இலங்கை—இந்திய ஒப்பந்தத்தை மீறி இலங்கை அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகளைப் பாரத அரசு கவனத்திற்கு எடுக்காதது எங்களுக்கு மிகவும் மனவேதனையை அளிக்கின்றது.

இப்போதெல்லாம் சாதாரண தொழிலாளிகள், விவசாயிகள் தங்கள் தொழில்களைச் செய்யமுடியாமல் உள்ளது.

★ மாணவர்கள் அமைதியாகத் தங்கள் கல்வியைத் தொடர முடியாமல் உள்ளது.

★ அப்பாவிப் பொதுமக்கள் அடிக்கடி கைது செய்யப்பட்டுப் பெரும் அவஸ்தைக்கு உள்ளாக்கப்படுகிறார்கள்.

★ வைத்திய அதிகாரிகள், பொதுச்சேவை உறுப்பினர்கள் இராணுவமுகாமிற்கு அழைக்கப்பட்டு அங்கு காரணமின்றித் தடுத்து வைக்கப்படுகின்றார்கள்.

★ தமிழ்ப் பகுதிகளில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம் தடைசெய்யப்படவில்லை. மேலும் மேலும் விஸ்தரிக்கப்படுகின்றன.

எமது கடந்தகால அரசியல் வரலாற்றைத் திருப்பிப் பார்த்தால் 1956ஆம் ஆண்டிற்குப் பின் காலத்திற்குக்காலம் பதவிக்கு வந்த அரசாங்கங்களினால் தமிழர்களாகிய நாம் ஏமாற்றப்பட்டே வந்துள்ளோம் என்பது தெரியும்.

அண்மைக் காலத்தில் கூட மாவட்ட சபையால் ஏமாற்றப்பட்டோம். அப்படித்தான் மாகாணசபையும் அமையும் என்ற அச்சம் எமக்குண்டு.

### கோரிக்கைகள்

ஆகவே, தயவுசெய்து மனிதாபிமான முறையில் தமிழ் பேசும் மக்களாகிய எங்களை நிம்மதியாக வாழச் செய்வதற்கு —

★ நிபந்தனையற்ற போர் நிறுத்தம் ஒன்றைப் பிரகடனப்படுத்த வேண்டும்.

★ அதனைத் தொடர்ந்து விடுதலைப் புலிகளுடன் பேச்சு வார்த்தை நடத்தவேண்டும்.

★ வெலிஓயா சிங்களக் குடியேற்றத்தைத் தடுக்கவேண்டும்

★ 1985ஆம் ஆண்டின் பின் நெடுங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவின்கீழ் உள்ள ஊஞ்சல் கட்டி கிராம சேவையாளர் பிரிவில் சட்டவிரோதமாகப் பதிவு செய்யப்பட்டுள்ள சிங்கள வாக்குகளை ரத்துச் செய்ய வேண்டும்.

★ இலங்கை அரசாங்கத்தினாலும், இந்திய இராணுவத்தினராலும் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் இளைஞர்கள் அனைவரையும் உடன் விடுதலை செய்ய வேண்டும் — எனக்கோருகிறோம்.

இதன்மூலம் தமிழ் பேசும் மக்களாகிய நாங்கள் சுதந்திரமாக - சுயநிர்ணய உரிமையுடன் வாழ வழி வகுக்கவேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றோம்.

—இப்படி அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-164)

பரந்தன் அனுபவம்:

# கடைக்கு வெளியே வந்த வேளையில் எம்மீது சரமாரியாகச் சுடப்பட்டது

## காயமடைந்தவர் தகவல்

யாழ்ப்பாணம் ஜூலை 18

கடைக்கு வெளியே வருமாறு எம்மைக் கூறிவிட்டு-நாம் கடைக்கு வெளியே வந்தபொழுது எம்மீது இந்திய அமைதிப் படையினர் சரமாரியாக துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டனர்.

வெள்ளிக்கிழமை பரந்தன் சந்தையில் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் காயமடைந்து யாழ்-ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவருபவர்களில் ஒருவரான கதிர்காமு-சந்திரசேகரம் (வயது 23) இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

'ஸ்ரீ முருகன் ஸ்ரோர்ஸ்' கடையில் நான் வியாபாரம் செய்துகொண்டிருந்தேன்.

அப்பொழுது சந்தைப் பகுதியில் பலவாறு வெடிச்சத்தங்கள் கேட்ட வண்ணம் இருந்தன

இதனை அடுத்து நாம் கடைக்குள் பதுங்கிக் கொண்டோம். பின்பு அங்கு வந்த அமைதிப் படையினர் எம்மை வெளியே வருமாறு அழைத்தனர்.

நாம் வெளியே வந்ததும் எம்மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

இதனால் எனக்கும் எனது கடையில் வேலை செய்யும் விமலநாதன் (வயது 19) என்பவருக்கும் காயங்கள் ஏற்பட்டன.

பின்பு அவ்விடத்துக்கு வந்த வேறு படையினர் எம்மை வாகனம் ஒன்றில் ஏற்றி கிளிநொச்சி ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர்.

அதன் பின்பு நான் யாழ். ஆஸ்பத்திரிக்கு கொண்டுவரப்பட்டேன்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

இச் சம்பவத்தில் காயமடைந்த ஆயுர்வேத வைத்தியர் சுப்பிரமணியம் ராஜவேலு (வயது 54] சம்பவம் பற்றித் தெரிவித்ததாவது:-

நான் கடமை முடிந்து வீட்டுக்குச் செல்வதற்காக பஸ் தரிப்பில் நின்றேன்.

அப்பொழுது திடீரென துப்பாக்கி வேட்டுகள் முழங்கின. இதனால் நான் அருகே இருந்த தேனீர்க்கடை ஒன்றுக்குள் நுழைந்தேன்.

அங்கு வேறு பலரும் பயத்தினால் நடுங்கியபடி இருந்தனர்.

எனினும் கடைக்குப் பின்பக்கத்தால் வந்த இராணுவத்தினர் எம்மைக் கண்டு சுடத் தொடங்கினர்.

அனைவரும் கடவுளே-கடவுளே எனக் கத்தினோம்.

எனினும் அதைப் பொருட்படுத்தாத படையினர் எம்மை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர்.

இதனால் கடை முதலாளி வயிற்றில் காயமடைந்த நிலையில் முகம் குப்புற கீழே விழுந்தார்.

இதனைபடுத்து எனது கையிலும் துப்பாக்கிக் குண்டுகள் தாக்கின.

பின்பு வேறு படைப் பிரிவினர் வந்து ''உங்களுக்கு என்ன நடந்தது?'' என்று கேட்டனர்.

''எம்மைச் சுட்டுப் போட்டார்கள்'' என்று சொன்னோம்.

அதற்கு அவர்கள், ''எல்.ரீ.ரீ.ஈ. தான் சுட்டுப் போட்டுப் போகிறார்கள்'' என்றனர்.

பின்னர் எம்மை றோட்டுக்குக் கொண்டு வந்து வாகனம்மூலம் கிளிநொச்சி ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர்.

அதன் பின்னர் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தேன்

இவ்வாறு அவர் கூறினார். (ஒ- 10)


### விடைகள் நாளைய 'உதயனில்'

கடந்த 16-06-1988 சஞ்சீவியில் பிரசுரமான ஐந்தாம் வகுப்பு புலமைப்பரிசில் பரீட்சைக்கான மாதிரி வினாத்தாள் இல. 3ற்கான விடைகள் நாளைய உதயனில் பிரசுரமாகும்.


### வடகோவை கண்ணகை அம்மன் மகோற்சவம்

கோப்பாய் ஜூலை 18

வடகோவை பலானை கண்ணகை அம்மன் கோவில் வருடாந்த மகோற்சவம் நாளை 19ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து பத்துத் தினங்கள் உற்சவம் நடைபெறும்.

28ஆம் திகதி புதன்கிழமை காலை 10 மணிக்கு தேர்த்திருவிழாவும், மறுநாள் வியாழன் பகல்11மணிக்குத்தீர்த்த உற்சவமும் நடைபெறும்.

30 ஆம் திகதி சனிக்கிழமை பூங்காவனத்துடன் உற்சவம் நிறைவு பெறும். (கி-72)

### மணவாளக் கோல அபிஷேகம்

யாழ். கோட்டை முனீஸ்வரன் தேவஸ்தான வருடாந்த மணவாளக்கோல அபிஷேகம் கடந்த வியாழக்கிழமை ஆரம்பமானது.

25 நாட்கள் நடைபெறும் இந்த மணவாளக் கோல விழாவின் இறுதி நாளன்று ரதோற்சவம் நடைபெறும். (க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

**1. R. S. Pathy Marunthu**

இது தலைவலி, ஜலதோஷம், காய்ச்சல், கைகால் உளைவு, வலி, குத்து, நோவு வாதம், வேதனை முதலியவைகளுக்குச் சிறந்தது.

விலை சின்னப்போத்தல் 8/-
பெரியபோத்தல் 16/-

தயாரிப்பு:-
**ஆர். எஸ். பதி அன்கோ, மதுரை**
கிடைக்கும் இடம்:-
**க. செ. கைலாசம்பிள்ளை அன் சன்ஸ்**
**5(76), பெரியகடை, யாழ்ப்பாணம்.**


# உதயன்


18 - 07 - 1988 திங்கட்கிழமை



**KAILAS Kalnar Tooth Powder**

**2. கைலாஸ் கல்நார் பற்பொடி**

இப்பற்பொடியை தினமும் பாவித்து வந்தால் பல்வலி, முரசுகரைதல் வாய் நாற்றம், பல்அரணை, பல்கூச்சம். பல்ஆட்டம், பல்சீழ்வடிதல் முதலிய பல்வியாதிகளும் குணமாகும்.

விலை 1 பக்கற் 1/-
**க. செ. கைலாசம்பிள்ளை அன் சன்ஸ்**
**5(76), பெரியகடை, யாழ்ப்பாணம்.**



## கணக்கியல் A/L

பிரத்தியேக வகுப்புக்கள்
ஆரம்பம்: 25-07-1988
ஆண்டு: 1989
1990

ஆசிரியர் : ஸ்ரீ
விபரங்கட்கு நேரில்

**ஸ்ரீ**

393/47, கோவில் வீதி, நல்லூர்.



## பதவி வெற்றிடங்கள்

நீரிறைக்கும் மோட்டார் பம்ப் உற்பத்தி செய்யும் தொழிற்சாலையில் பின்வரும் தொழில் தெரிந்தவர்களும் பயிலுனர்களும் தேவை:

1- பித்தளை வார்ப்பு வேலை(Moulders)
2- Fitters

நற்சான்றுப் பத்திரங்களுடனும், அனுபவ சான்றிதழ்களுடனும் திங்கட்கிழமை அல்லது செவ்வாய்க்கிழமை (18ஆம் 19ஆம் திகதிகளில்) நேரில் வரவும்.

முகாமையாளர்,
**சொலிட்**
சில்லாலை வீதி, பண்டத்தரிப்பு.

(5316)


**யாழ். மக்களால் . . . .**


(1ஆம் பக்க தொடர்ச்சி)


கிறதென்றும் கண்டு கொண்டேன்.

இந்திய அமைதி காக்கும் படை சில சேவை களைச் சிர்செய்திருப்பதைக் காணமுடிகிறது. அத்துடன் பிறிகேடியர் காலேயன் நகர நிர்வாகத்தைத் திறமையாகச் செய்து வருவதையும் அவதானிக்க முடிந்தது.

இவ்வாறு திரு கிறிஸ் நட்டால் தெரிவித்தார், (அ-9)


## ஓர் அரிய சந்தர்ப்பம்

பின்வரும் பகுதிகளுக்கு பயிலுனர்களாக சேர்வதற்கு ஆர்வம் உடையோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

16 — 25 வயதுக்கு உட்பட்டவர்களாகவும் க. பொ. த. சாதாரண தரம் சித்தி அடைந்தவர்களாகவும் இருப்பின் ஜூலை 18, 19, 20 ஆம் திகதிகளில் காலை 10 மணிக்கும் 11 மணிக்கும் இடையில் நேரில் சமுகம் தரவும்.

★ COLOUR PR NT NG UNIT
★ OST UNIT
★ RESTAURANT & KITCHEN UNIT
★ APARTMENT UNIT

**ஞானம்ஸ் ஸ்ருடியோ**
**ஹோட்டல் ஞானம்ஸ்**
**299, 301, மணிக்கூட்டு வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(C/5883)



றியோ ஹோட்டல்

## திறப்பு விழா

யாழ்ப்பாணம் பிரதான வீதி 57 ஆம் இலக்க கட்டடத்தில் நீண்டகாலமாக இயங்கி வந்த உங்கள் அபிமானம் பெற்ற றியோ ஹோட்டல் மீண்டும் 18-07-1988 **இன்று காலை** திறக்கப்படவுள்ளது.

தங்களுக்குத் தேவையான சகல விதமான சிற்றுண்டி வகைகளுடன் சைவ, அசைவ உணவுகளுடனும் விஷேடமாக முஸ்லிம் புரியாணியும் வழங்கப்படும் என்பதை வாடிக்கையாளர்கள், நண்பர்கள் அபிமானிகள் ஆகியோருக்கு தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறார்கள்.

ஆதரவுக்கு நன்றி!

(5328)


## மரண அறிவித்தல்கள்

### திரு. நாராயணி மகாலிங்கம்

சாவகச்சேரி டச் வீதியைச் சேர்ந்த இளைப்பாறிய தலைமை ஆசிரியர் திரு. நாராயணி மகாலிங்கம் அவர்கள் 16-7-88 அன்று காலமானார். அன்னார் ஓய்வுபெற்ற ஆசிரியை (மகளிர் மகா வித்தியாலயம் சாவகச்சேரி), திருமதி அகிலாண்டத்தின் அன்புக் கணவரும், விவேகானந்தனின் (மானு) அன்புத் தந்தையுமாவார். இவர் கண்டி மாகியாவை இரட்சண்ய சேனை த. க. பாடசாலையில் நீண்ட காலம் ஆசிரியராகவும், கண்டி/கடுகண்ணுவ C. C. த. கலவன் பாடசாலை அதிபராகவும், மத்திய மாகாண ஆசிரியர் சங்கக் காரியதரிசியாகவும், கண்டி சைவ மகாசபை காரியதரிசியாகவும் பலகாலம் பணிபுரிந்தார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 18-7-88 திங்கட்கிழமை காலை 10 மணியளவில் நடைபெறும். இத்தகவலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: **ம. விவேகானந்தன்** (மானு)
ஆனந் மகால்,
டச் வீதி,
சாவகச்சேரி.

(5086)

### இளையதம்பி எட்வேட்சின்னத்துரை

முன்னாள் யாழ். மாநகரசபையில் மின்சாரப் பகுதியில் கடமையாற்றிய இளையதம்பி எட்வேட் சின்னத்துரை அவர்கள் 17-7-88 அன்று காலமானார். அன்னார் இராசம்மாவின் அன்புக்கணவரும், அருமைநாயகம், தருமநாயகம், அருளானந்தம், துரைசிங்கம், ஜீவமணி, பிரான்ஸிஸ், ரூபாவதி ஆகியோரின் அருமைத் தந்தையும். திலகேஸ்வரி, பிரேமாவதி, ஜெயதேவி, ஜெயாநந்ததேவி, கனகரட்னம் ஆகியோரின் அன்பு மாமனுமாவார். அன்னாரின் பூதவுடல் இன்று 18-7-88 (திங்கட்கிழமை) பி. ப 4 மணியளவில் 18, பழைய பூங்காவீதியிலிருந்து பரியோவான் சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

தகவல்: **S. அருளானந்தம்**
அன்றீஸ் அன் கம்பனி லிமிட்டற்,
யாழ்ப்பாணம்.

(5090)

### சுப்பிரமணியம் மனோன்மணி

மல்லாகத்தைச் சேர்ந்த திருமதி மனோன்மணி காலமானார்.

அன்னார் காலம் சென்ற M S. சுப்பிரமணியம் (சட்டத்தரணி) அவர்களின் அன்பு மனைவியும், காலம் சென்ற சுப்பிரமணியம் (சட்டத்தரணி J P.) தம்பதிகளது சிரேஷ்ட புதல்வியும், திருமதி நகுலாம்பிகை அம்பிகைபாகன், திருமதி மகேஸ்வரி பஞ்சலிங்கம் ஆகியோரின் சகோதரியும், Dr. செ. பத்மநாதனின் ஒன்றுவிட்ட சகோதரியும், ஆனந்தக்குமாரசுவாமி (குடும்பத்திட்ட சங்கம், கொழும்பு), பூங்கோதை (U.S.A.), Dr. பாலசுப்பிரமணியம் (U.S.A.), Dr. செந்தில்செல்வன் (Kuwait), ஆனந்தகௌரி (U.S.A.) ஆகியோரின் பெரியதாயும், சரோஜாதேவி, சர்வேந்திரன் (U.S.A.), காயித்திரி (U.S. .), லோகேஸ்வரி (Kuw it), நவானந்தன் (U.S.A.) ஆகியோரின் பெரிய மாமியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 4 மணிக்கு அன்னாரின் 'மணிமனை' இல்லத்திலிருந்து தகனக் கிரியைகளுக்காக தெல்லிப்பளை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

''மணிமனை''
மல்லாகம்.

(5088)

### E. V. கார்த்திகேசு மாஸ்ரர்

நல்லூர் வைமன் வீதியில் வசிப்பவரும், ஆனைப்பந்தி உயர் கலைக்கல்லூரி ஸ்தாபகரும் ஆகிய திரு. E. V. கார்த்திகேசு மாஸ்டர் அவர்கள் 17-7-88இல் காலமானார். அன்னார் சுந்தரத்தின் அன்புக் கணவரும், சிவசுப்பிரமணியம் (சிவா, சாம்பமூர்த்தி Audit, யாழ்.), திருமதி சரோஜினி (U K.), திருமதி கமலாதேவி (கமலா, கரம்பன்), திருமதி விஜயலக்ஷ்மி (U.K.), திருமதி மகாலக்ஷ்மி (U.K), செல்வி சரஸ்வதி ஆகியோரின் அன்புத் தந்தையும், திருமதி சரோஜினி (ராதா, சங்கானை), காலஞ்சென்ற விநாயகமூர்த்தி (U.K.). டாக்டர் யோகநாதன் (கரம்பன்), சண்முகலிங்கம் (U.K.) இராமச்சந்திரன் (U.K.) ஆகியோரின் அன்பு மாமனும், சபேசன், அநந்தா, அனிதா, அஞ்சலா, அகிலா, அனுஜா, அருணா, நிமலன், பிரசன்ன, பிரகாஷ், மீனகா, மிதுலா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 18-7-88 (இன்று) திங்கள் பிற்பகல் 3 மணியளவில் 8/4 (18/12) வைமன் வீதியில் உள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல் :
**கா. சிவசுப்பிரமணியம் (சிவா)**

(5089)

## கண்ணீர் அஞ்சலி!

### திருமதி சண்முகம் ரஞ்சினிதேவி

10 ஆம் வட்டாரம் – புங்குடுதீவு
கண்ணகை அம்மன் கோவிலடி.



பிறப்பு:
**08-06-1957**

இறப்பு:
**10-07-1988**

புங்குடுதீவைப் பிறப்பிடமாக கொண்டவரும் கொட்டடியை வசிப்பிடமாக கொண்டவரும் தெமட்டகொட வர்த்தகர் சண்முகத்தின் மனைவியும், முன்னாள் யாழ். மார்க்கட் வர்த்தகர் தில்லைநாதன் தனலெட்சுமியின் அன்புப் புதல்வியும் லலிதாஞ்சனி [வேம்படி மகளிர் கல்லூரி ஆண்டு 8 D] ரஜனிகாந், ரதிஸ்காந் [யாழ். மத்திய கல்லூரி] சுரேகா [சென் மேரிஸ் மகாவித்தியாலயம்] சுரேகாந் ஆகியோரின் அன்புத் தாயாரும், ரவீந்திரநாதன் [அமெரிக்கா] நகுலேஸ்வரநாதன் [அமெரிக்கா] ரஞ்சிதாதேவி ராஜகோபால் [பிரான்ஸ்] சந்திராதேவி, சகுந்தலாதேவி, சற்குணநாதன் [வைத்தீஸ்வர வித்தியாலயம்] சயிலைநாதன் [நமச்சிவாய வித்தியாலயம்] ஆகியோரின் அன்புச் சகோதரியும், செல்லையா [வேலணை] காலஞ்சென்ற பிரபல வர்த்தகர் இராசையா [ராஜா கொம்பனி, கொழும்பு] [தெமட்டகொட வர்த்தகர் நல்லதம்பி அன்சன்ஸ்] வர்த்தகர் தெமட்டகொட நரசிங்கம், ஐயாத்துரை [ஜெர்மனி] பொ. சபாரெத்தினம் மனோன்மணி [ஆசிரியர் மண்டைதீவு மகாவித்தியாலயம்]சின்னதம்பி பொன்னையா [புங்குடுதீவு] திருமதி ஆ. கந்தையா [ஓமந்தை] ஆகியோரின் அன்பு மைத்துனியும், நாகமணி சின்னம்மாவின் மருமகளுமாவார்.

11.07.88இல்வில்லூன்றி மயானத்தில் தகனக் கிரியைகள் இடம் பெற்றன. உற்றார் உறவினர், நண்பர்கள் இதனை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
முன்னாள் மார்க்கட் வர்த்தகர்
நா. தில்லைநாதன்
தி. தனலெட்சுமி

30/2 சினிவாசகம் ரோட்,
கொட்டடி, யாழ்ப்பாணம்.

(5330)

### திருமதி கந்தையா மகேஸ்வரி

கோப்பாய் தெற்கைச் சேர்ந்த திருமதி கந்தையா மகேஸ்வரி காலமானார். இவர் காலம் சென்ற கந்தையா சின்னத்தங்கம் தம்பதிகளின் புதல்வியும், காலம் சென்ற கந்தையாவின் (Station Master) அன்பு மனைவியாரும், மகேந்திரன் (ஜேர்மனி), மனோகரன் (பூநகரி), நிர்மலா, உஷா (இந்தியா), மகேஸ்வரன் (ஹொலண்ட்), நிசாணி, சசிமலா, சியாமலா ஆகியோரின் அன்புத் தாயாரும், பீதாம்பரம் (ஜேர்மனி), குணபாலசிங்கம் (கனடா), சண்முகசுந்தரம் (கோப்பாய்), விஜயலட்சுமி (பூநகரி) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 18-7-88 (இன்று) திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனத்திற்காக கோப்பாய் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல் :
**கந்தையா மனோகரன்**
கோப்பாய்

(5333)






### திறப்பு விழா

**மற்றொரு தினத்தில்**

யாழ்ப்பாணம் ஜூலை 18

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் அகதிகளுக்கான ஸ்தானிகராலயத்தின் யாழ். கிளை யாழ். கோவில் வீதியில் இயங்குவதற்கான தளபாடங்கள் நேற்று வந்து சேர்ந்தன.

இன்று திங்கட்கிழமை அலுவலகம் திறக்கப்படுமென்று அறிவிக்கப்பட்ட போதிலும் உத்தியோகபூர்வமாகத் திறக்கப்படும் நாள் பின்னர் அறிவிக்கப்படுமென்று ஐ. நா. அகதிகள் ஸ்தானிகராலயத்தின் பிரதிநிதிகளில் ஒருவரான திரு. ஆர். டிஸ் பென்ஸா உதயனுக்குத் தெரிவித்தார். (இ-9)

### போலி....

தண்டனையான மரண தண்டனை வழங்கப்பட்டது.

மேலும் இதேபாணியில் பலகொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்ட இன்னும் பலர் எம்மால் இனங்காணப்பட்டுள்ளார்கள்.

இவர்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டு கொள்ளையிட்ட பொருள்களுடன் சரணடைவார்களெனில் மன்னிக்கப்படுவார்கள் எனத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### முதலாம் வருட நினைவஞ்சலி

**A. S. அரசரட்ணம்**

மிருசுவிலைச் சேர்ந்த A. S. அரசரட்ணத்தின் ஓராண்டு நித்திய இளைப்பாற்றிக்காக,

**19-7-88**

மிருசுவில் காணிக்கை மாதா ஆலயத்தில் காலை 6-15க்கும். யாழ் ஆச்சிரம, புனித யுவனியர் ஆலயங்களில் காலை 6-00க்கும் திருப்பலிப் பூசை ஒப்புக்கொடுக்கப்படும்.

**மகன், மகள்**
**மருமகள்,**
**பேரப்பிள்ளைகள்.**

Dr. அ.பே. பிரான்சிஸ்

(5091)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் பிறைவேற் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி 292/2, இலக்கத்தில் உள்ளஅவர்களது அச்சகத்தில் 18 – 07 – 1988 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Printed and Published by New Uthayan Publication (Pvt) Ltd 292/2, Navalar Road, Jaffna on Monday 18th July 1988.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org